நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

செந்தமிழ்

பகுதி: 1

தொகுதி: 112

திருவள்ளுவர் ஆண்டு 2049

திங்கள் இதழ்

விலை: ரூ.20

சனவரி-2018

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்ப முரளி**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம் I.R.S.,** (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறியாளர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் 4

2. உளவியல் பார்வையில் குறுந்தொகைப் பாடல்கள் 8
   - பேராசிரியர் ப.மருதநாயகம்

3. சிலப்பதிகாரப் புதையல்கள்
   - கோவலன் பெற்ற விருதுகள் 17
   - முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

4. சங்க இலக்கியங்களில் இயற்றமிழ்க் கூறுகள் 21
   - பேராசிரியர் செ.சாரதாம்பாள்

5. நீலகேசி 31
   - முனைவர் பெ.சுயம்பு

6. 'சீவகசிந்தாமணியில் கற்பனை நயமும் வருணனைத் திறனும்
   - முனைவர் உ.கருப்பத்தேவன் 35

7. சங்கச் செய்திகள் 38

வலைதளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

தமிழக அரசு விருது

பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்களுக்குத் தமிழக அரசின் கி.ஆ.பெ.விருது வழங்கப்பட்டிருப்பது கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தொடர்ந்து செந்தமிழ் இதழ் படித்துவரும் தமிழ் மக்கள் பேராசிரியர் ப.மருதநாயகத்தின் தமிழ்த்தொண்டை நன்கு அறிவர். அப்பெரியார் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் புலமைமிக்கவர். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பன்னெடுங்காலம் பணி ஆற்றி ஓய்வு பெற்ற பின்பும் இடையறவு இன்றிக் கல்விப்பணி ஆற்றிவரும் சான்றோர். அவர்கள் மேலை நாட்டுப் பல்கலைக்கழகங்களின் அழைப்பின் பேரில் அங்குச் சென்றுப் பலகாலம் தமிழ்ச்சொற்பொழிவு நடத்தும் சிறப்பைப் பெற்றவர். அங்குள்ள நூலகங்களில் கிடைக்கும் தமிழ்ச் செல்வங்களைத் தேடி எடுத்து உலகுக்கு வழங்கி வருகிறார்கள். நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு அறிஞராகப் பணியாற்றி வருவதோடு உலகமெங்கும் உள்ள தமிழறிஞர்களுடன் தொடர்புகொண்டும் பல்வேறு கருத்தரங்குகளில் கலந்து கொண்டும் பல்கலைக்கழகங்களில் சொற்பொழிவாற்றியும் தமிழாய்வுத்துறையை வளர்த்து வருகின்றார்கள். அவர் பல்வேறு பணிகளுக்கிடையே நம் செந்தமிழ் இதழில் கட்டுரை எழுதித் தமிழ் மாணவர்களுக்கு ஆய்வுப் பாதையைத் தெளிவுறுத்துகிறார். தமிழ் மாணவர்கள் அதனைப்போற்றி அவருடைய கட்டுரைகளைத் தொகுத்துப் படித்துப் பயன்பெறவேண்டும்.

மேலைநாட்டு உளவியல் அறிஞர்கள், இலக்கிய ஆய்வுகள், திறனாய்வாளர்கள் தம் பரந்த கல்விச்சிறப்பால் தமிழ்ச்செவ்விலக்கியப் பொருட்செறிவைக் கண்டுணரத் தொடங்கியுள்ளனர். பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழ் அக இலக்கியங்கள் உளவியல் நோக்கில் அன்பை உயிர்ப்பண்பாகப் படைத்து அதற்குரிய இலக்கிய உத்திகளையும் வழிகாட்டுதலையும் செப்பமுற அமைத்திருப்பதை மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் வியந்து போற்றுகின்றனர். இத்தகைய இலக்கியத்திற்குச் சொந்தக்காரர்கள் இன்றும் தமிழ்மொழியை பேசியும் கற்றும் அதன் இலக்கண இலக்கியங்களைப் போற்றி வருவதைப் பெருமித உணர்வோடு பார்க்கிறார்கள்.

இந்திய இலக்கியம் என்றால் வடமொழி இலக்கியம் மட்டும் என்ற பரப்பல் மேலைநாடுகளில் இருந்தது. இப்பொழுது தமிழ் இலக்கியம் மேலைநாட்டு ஆய்வாளர்களின் சிந்தனையுள் புகுந்து உலகளாவிய சிறப்பைப் பெறுகிறது.

வடமொழி இலக்கியங்களின் பாலுறவு நிகழ்வுகளே காதல் இலக்கியங்கள் என்று இடம் பெற்றிருந்த நிலையில் தமிழ் இலக்கியம் வாழ்க்கைச் செய்தியாக உளவியல் அடிப்படையில் அன்பின் வெளிப்பாட்டை வாழ்க்கையாக - காதலாக - களவு - கற்பாக அமைத்திருப்பதை அறிஞர்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

பேராசிரியர் ப.மருதநாயகம் மேலைநாட்டு அறிஞர்களின் சிந்தனை தமிழ் இலக்கியத்தின் பக்கம் திரும்பி இருப்பதை நமக்கு அறிவுறுத்துகின்றார். தமிழ்செவ்விலக்கியம் உலக இலக்கியமாக உலகமாந்தர் அனைவராலும் கற்கும் நாள் வெகுதொலைவில் இல்லை.

பேராசிரியர் ப.மருதநாயகம் "உளவியல் பார்வையில் குறுந்தொகைப்பாடல்கள்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைந்துள்ளார். அகஇலக்கியம் வாழ்க்கைஇலக்கியம்; காதல், வாழ்வை இன்புறுத்துகிறது. மலரினும் மெல்லிய உணர்வுகளை நயம்படக்காட்டும் சங்க இலக்கியச் செய்திகளை ஆசிரியருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

தமிழறிஞர் இளங்குமரனார், சிலப்பதிகாரப்புதையல் என்னும் தலைப்பில் கோவலன் பெற்ற விருதுகள் குறித்து இவ்விதழில் எழுதுகிறார். நாடகத்தலைவன் காண்போர் உள்ளம் வியந்து போற்றும் அதீதமான சிறப்புடையவன் கருணைமறவன், செல்லாச் செல்வன், இல்லோர் செம்மல் எனப் போற்றப்படுகிறான். காப்பிய நாடகங்கள் இருவேறு உத்திகளைக் கடைப்பிடிக்கின்றன. தலைவன் அறிவு ஆற்றல் நெறிமுறைகளைப் போற்றுபவன் மட்டும் அல்லன்; காண்போர் வியக்கும் வீரச்சுவையோடு நம்ப முடியாத உயர்வுநிலைக்குத் தலைவனைப் படைத்து காட்சி இன்பத்தை நாடகம் பார்ப்பவர்களுக்கு அளிப்பதும் நாடக ஆசிரியன் மேற்கொள்ளும் உத்தியாகும். இதனை,

"*நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*

பாடல் சான்ற புலனெறி வழக்கம்" எனப் போற்றினர்.

இளங்கோவடிகளின் பாட்டுடைத் தலைவன் உயிர்களிடத்தில் அளவிறந்த இரக்கம் உடையவன்; உயிர்களின் பொருட்டு தன்னைப் பற்றிக் கவலைப்படாத அருங்குணம் உடைய வீரன், அருளும் வீரமும் ஒருங்கமைந்த பெருமிதப் பண்பாளன், கருணைமறவன் எனப் போற்றப்படுகிறான். யானையை அடக்கும் துணிவும் வீரமும் நாடகக் காட்சியில் திகைக்க வைக்கும் அருஞ்செயல் அல்லவா?

"செல்லாச் செல்வன்" எனக் கோவலனின் ஈகை மடத்தை இளங்கோ போற்றுகிறார். அதீதமான நிகழ்ச்சிகளில் ஒன்று மனிதனைப் பூதம்புடைத்துண்பதுமாகும். பொய்யனைப் பூதம் புடைத்துண்ட பின்பு

அவனுடைய குடும்பத்தினருக்கு அரும்பொருள் அளித்துப் பாதுகாக்கின்றான். இல்வாழ்வானைக் காத்த அருஞ்செயல் "இல்லோர் செம்மல்" என்னும் அரியபேற்றைப் பெற்றுத் தந்தது. இளங்கோ தன் பாட்டுடைத் தலைவனை முழுமையான பாத்திரப் படைப்பாக நம்முன் கொண்டு வரும் உத்தியை அறிஞர் இளங்குமரனார் "கருணைமறவன்", "செல்லாச் செல்வன்", "இல்லோர் செம்மல்" என எடுத்துரைக்கும் உண்மை உணர்தல் பாலது. அவை வெறும் சொற்கள் அல்ல; தலைவன் வாழ்க்கை; தலைவனின் வாழ்க்கை மக்கள் இதயத்தில் இதயக்கனி ஆகிறது. அவன்தான் தலைவன்.

பேராசிரியர் செ.சாரதாம்பாள் மதுரைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்; தொடர்ந்து தகைசால் பேராசிரியராகப் பணி ஆற்றி வருகின்றார். அவர்கள் எழுதிய "சங்க இலக்கியங்களில் இயற்றமிழ்க் கூறுகள்" என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. முத்தமிழில் இயற்றமிழ் கூறுகள் சங்க இலக்கியக் கவிதைகளில் இடம்பெற்று நாடக நடை அமைப்பைப் பெற்று பொருள் விளக்கம் தருவதை ஆசிரியர் சைகைமொழி தொடங்கி பல்வேறு நிலைகளில் சங்க இலக்கியத்தில் நகைச்சுவை நயம் காட்டுவதையும் குறிப்புமொழியாக பொருள்விளக்கம் பெறுவதையும் பல்வேறு நூல்களிலிருந்து எடுத்துரைத்து கட்டுரையை நிறைவு செய்துள்ளார்.

பேராசிரியர் பெ.சுயம்பு சிறுகாப்பியத்தொடரில் இவ்விதழில் நீலகேசி சிறுகாப்பியம் குறித்து அறிமுகம் செய்கிறார். நீலகேசி மதம் சார்ந்த தர்க்கநூல் என்பதை தக்க ஏதுக்களால் எடுத்துரைக்கிறார். சங்ககாலத்திற்குப் பின்பு தமிழகத்தில் வடநாட்டுச் சமயங்கள் தடம் பதித்தன. பௌத்தம், சமணம், வேதமார்க்கம் எனப் பல்வேறு சமயக்கணக்கர், தங்கள் சமய உண்மைகளை நிலைநிறுத்த சமய நிறுவனங்களை நிறுவி சமயப்போர் செய்தனர். அரசர்களுடைய தலையீடும் இருந்ததால் சமயக்கலவரங்கள் ஆங்காங்கு நிகழ்ந்தன. சமயங்கள் மக்கள் உள்ளங்களில் அன்பின் நீர்மையைக் கட்டமைப்பதை விட்டு தீய நெறியைப் பரப்பிப் பகைமையை வளர்க்கின்றன. பட்டிமன்றப் பாங்கறியாது ஊர்தோறும் செற்றமும் கலாமும் பெருகின.

பேராசிரியர் உ.கருப்பத்தேவன், "சீவகசிந்தாமணியில் கற்பனை நயமும் வருணனைத் திறமும்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுகிறார். கற்பனைவிளக்கங்கள், கவிஞனும் கற்பனையும், கற்பனை வகைகள், சீவகசிந்தாமணியில் கற்பனை நயம், படைப்புக் கற்பனை, கருத்து விளக்கக்கற்பனை, இயல்புக் கற்பனை, காட்சிக் கற்பனை என

உள் தலைப்பிட்டுக் கற்பவர் உள்ளம் கொள்ளும் வண்ணம் கட்டுரையை வடிவமைத்துள்ளார். சீவகசிந்தாமணியின் கட்டமைப்பும் கற்பனையும் கம்பன் போன்ற மகாக்கவிகளுக்கு காப்பியத்தை விரிவாக எழுதுவதற்கு வித்திட்டதாக அறிஞர் உலகம் போற்றும் பேராசிரியர் கருப்பத்தேவன் சீவகசிந்தாமணியில் உள்ள பல்வேறு இலக்கிய நயங்களை அழகுறப் படைத்துள்ளார். தொடர்ந்து படித்து இன்புறுக.

பேராசிரியர் தெ.முருகசாமி அன்புறு வாழ்த்து!

தமிழாகரர்.பேராசிரியர் தெ.முருகசாமி
மேனாள் முதல்வர், இராமசாமி தமிழ்க்கல்லூரி,
புதுச்சேரி,
கைபேசி: 97901 15625

பழம் புகழ் பேணிப் புதும்புகழ் புதுக்கும்
பழமாம் செந்தமிழ்த் திங்கள் இதழ்தான்
முகவை மன்னர் முனைப்பால் வெளிவர
அகவை முதிர்ந்த அருந்தமிழ் இரா.இளங்
குமரனார் எழுத்து, குமரவேள் குடிகொள்
குன்றே போலக் குவலயத் துயர்ந்து
தமிழின் புதையலாய் வரும்நற் றொடர்ச்சியில்
அமிழ்துறழ் திசம்பர் இதழில் தானும்
"கொற்கை" பற்றிக் கொடுத்தவை எல்லாம்
"பொற்குவை" என்றே போற்றும் படியாய்
அள்ளி அணியும் அணிகள் போலவும்
வெள்ளி விளக்கொளி விடியல் போலவும்
இருந்தன இருந்தன என்றே இயம்ப
இறும்பூ தெய்தியே இதயம் இனித்தது!
வாழ்க செந்தமிழ் அந்தணர் குமரனார்!
சூழ்க அவர்தம் எழுத்தொளி எங்கும்!
அவர்தமைப் பேணும் மதுரைச் செந்தமிழ்த்
தவமாய் விளங்கும் தமிழின் சங்கம்!
மற்றும் செந்தமிழ் இதழும் அதனின்
உற்ற செயலர் மாரியப் பமுரளி
பதிப்பா சிரியராம் இராசதா சிவனார்!
மதிப்புறு தொண்டைப் போற்றிப் புகழப்
பாண்டி மண்டலப் பாண்டித் துரையுடன்
பாசு கரரையும் பணிந்தனன் நன்றே!

அன்பன் தெ.முருகசாமி

உளவியல் பார்வையில் குறுந்தொகைப் பாடல்கள்

பேராசிரியர் **ப.மருதநாயகம்**
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
100 அடி சாலை, தரமணி, சென்னை - 600 113
கைபேசி: 94427 87727

சங்கச்சான்றோர் பெற்றிருந்த உளவியல் அறிவு அவர் காலத்தே உலகின் வேறு எந்த இனமும் பெற்றிருந்த உளவியல் அறிவினும் பெருஞ்சிறப்புடையதாகும். இதனை அன்னாரின் அகப்பாடல் மரபுகள் தெளிவாகப் புலப்படுத்தும். தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் போன்ற பாத்திரப்படைப்புக்களும், எவ்வெப்பாத்திரம் எவ்வெச்சூழலில் எவ்வெவ்வாறு தன் கூற்றினை நிகழ்த்தும் என்பதற்குக் கையாளப்பட்ட மரபுகளும் அவர்கள் இயற்கை பற்றிய அறிவிற்கு இணையான மாந்தவுள்ளம் பற்றிய அறிவையும் பெற்றிருந்தனர் என்பதற்குத் தேவையான சான்றுகளாகும். இவ்வுலக மக்களின் வாழ்க்கை மேம்பட வேண்டுமெனில் அன்புணர்வே அதற்கு அடிப்படையாக வேண்டுமென்ற ஃபிராய்டின் கருத்து எழுவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னமேயே நம்மவர் தமிழ் இலக்கிய மரபில் காதலுக்குத் தலையாய இடம் ஒதுக்கி,

காதற்காமம் காமத்துச் சிறந்தது
விருப்போர் ஒத்த மெய்யுறு புணர்ச்சி (பரிபாடல் 9: 14-15)

என்றெல்லாம் அன்பை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையைப் பாராட்டிப் பேசினர்.

மலரினும் மெல்லிது காமம், சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்

என்று வள்ளுவர் கூறியதுபோல் அகப்பாடல்களிலிருந்து நாம் பெறும் முருகியல் இன்பமும் மிகவும் மென்மை கொண்டதாகும். அதனை உளவியல் அணுகுமுறையைத் தவறாகப் பயன்படுத்தி அழித்துவிடுவது எளிது. தலைமகனும் தலைமகளும் கொண்டுள்ள காதலால் தோன்றுகின்ற நுண்ணிய மனவுணர்வுகளைக் கவிதையுணர்வோடு எடுத்துச்சொல்லும் சங்கப்புலவர்கள் பாலுறவு நிகழ்வுகளை வடமொழிக் கவிஞர்களைப்போல் வெளிப்படையாக வருணிக்க முயலவில்லை என்பதை நாம் மனம்கொளல் வேண்டும்.

மார்ட்டின் செய்மர் ஸ்மித் என்பார் தமது **இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியத்திற்கு வழிகாட்டி (A Guide to Twentieth Century World Literature)** எனும் பெருநூலில் நானூறுமொழி இலக்கியங்களைத் திறனாய்வு செய்யும்போது, தமிழ் இலக்கியத்தின் தனிச்சிறப்பை வெளிப்படுத்தும் முறை நாம் அறிய வேண்டிய ஒன்றாகும். செம்புலப் பெயல் நீரரின் கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுத்து, அதனைப் பாராட்டுவதோடு அமையாமல், தொல்காப்பிய - சங்கக் கவிதையியலைக் கீழ்க்கண்டவாறு புகழ்ந்துரைப்பார்:

> தமிழ்க்கவிதையியல் வடமொழிக்கவிதையியலினின்று முற்றிலும் மாறுபட்டது; வியப்புக்குரியது. அதனை அறியத் தற்செயலாக வாய்ப்புக்கிடைக்கும் மேலை நாட்டினர்க்கு அது இன்ப அதிர்ச்சியூட்டும் புதையலாகும். அதில் கவிதை அகமென்றும் புறமென்றும் பகுக்கப்பெற்றுள்ளது. அங்கு ஒரு குறியீட்டுத்திறவுகோலும் (Symbolic Key) மிக மிக மேம்பாடுடைய நிலப்பாகுபாட்டைப் பயன்படுத்தும் உத்தியும் உள்ளன. மேற்கத்திய நாடுகளில் வாழும் கவிஞர்களின் போலிச் சோதனைகள் எல்லாவற்றைக் காட்டிலும் அக்கவிதையியல் இன்றைய நடைமுறைக்கு ஏற்றது... செவ்வியல் சார்ந்த தமிழ்க் கவிதையியல் மேலைக்கவிஞர்கள் தரும் வறண்ட வாழ்க்கைத் தத்துவத்திற்கு மருந்தாகி உள்மன இன்பங்களை அதிகரிக்க வல்லது. தமிழில் உள்ள அகத்திணைக் கவிதைகள் சிறு தவறும் இல்லாத, பெரிதும் பொருத்தமான உளவியல் அடிப்படை கொண்ட ஓர் அமைப்பிற்குள் இயங்குகின்றன.

1

திப்புத்தோளாரின் குறுந்தொகைப்பாடலை உளவியல் திறனாய்வு அணுகுமுறையில் நோக்கும்போது வேறு அணுகுமுறைகளுக்கு எட்டாத சில புதிய உள்ளொளிகள் கிடைக்க வாய்ப்புண்டு.

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

இதனைத் தோழியின் கூற்றாகக் கொண்டு, ‘தலைமகளோடு கூட விரும்பிய தலைமகன் செங்காந்தள் பூவைக் கையுறையாகக் கொடுத்துத்

தோழியிடம் தன்குறையைத் தெரிவித்தபோது அவள், "இப்பூக்கள் எங்கள் மலையில் உள்ளனவாதலால் இவற்றை நாங்கள் பெற்றுக்கொள்ள மாட்டோம்" என்று மறுத்துக் கூறுவதாகப் பொருள் கொள்வார் உ.வே.சா.

உளவியல் படிமங்களாகப் பார்க்கும்போது செங்கோலம்பும் யானையின் செங்கோடும் ஆணைக்குறிக்கும்; குருதிப்பூவின் குலைக்காந்தள் பெண்ணைக்குறிக்கும். அவ்வாறாயின் பாடலின் உட்பொருள் பூப்பெய்திய தலைவி புணர்ச்சி விருப்புடையவள், தலைவனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளவள் என்பதாகும். எனவே தோழி கையுறையை மறுத்தாலும் தலைவனுக்குத் தலைவியின் இசைவை மறைமுகமாக, குறிப்பாக, உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

'காந்தள் எம்மலையிடத்தும் உண்டென்பதால் இது தேவையில்லை' என்று அவள் கூற்று அமையினும் தலைவனை அவள் முற்றும் புறக்கணித்ததாகக் கொள்ளாமல், அவனது அன்பின் ஆர்வத் தையும் காதலின் ஆழத்தையும் அறிய வேண்டிக் கூட்டத்தை அப்பொழுதைக்குத் தள்ளிப்போட்டுப் பார்க்கலாமென்ற எண்ணத்தால் அவ்வாறு செய்ததாகவும் கொள்ளுதற்கு இடமுண்டு. ஆழ்மன நிலையில் அவனை ஏற்றுக்கொள்ளும் எண்ணம் தலைவிக்கு உண்டு என்பதைத் தோழி தன் கூற்றில் சுட்டும் பொருள்களால் அறியலாம். சேயின் குன்றத்தி லுள்ள குலைக்காந்தளைக் குருதிப்பூ என்று அவள் அழைப்பதும் சேய்க்கு உரிய படைக்கலமாகக் குருதி படிந்த அம்பையும் அவனுக்கு உரிய ஊர்தியாக மயிலையன்றிச் செங்கோட்டு யானையையும் அவள் குறிப்பிடுவதும் பாலுணர்வுப் படிமங்களை முன்னிறுத்தவே என்று கொள்ளலாம். மேலெழுந்த வாரியாகச் சொல்லளவில் கையுறையை மறுப்பினும் தலைவன் மேலும் வற்புறுத்தும் அளவில் அவனை ஏற்றுக் கொள்ளத் தலைவி தயங்கமாட்டாள் என்பதே இப்படிமங்கள் மூலம் தலைவனுக்குத் தரப்படும் செய்தியாகும்.

பாடலில் கூற்றெச்சமோ, குறிப்பெச்சமோ இல்லையெனக் கொண்டால் தோழி தலைவனிடம் "போர்க்களம் செந்நிறமாகும்படி அசுரர்களைக் கொன்றழித்த செங்கோலம்பையும் செங்கோட்டு யானையையும் வீரவளையையும் உடைய சேயின் குன்றம் குருதிப்பூவின் குலைக்காந்தளை உடையது" என்று மட்டும் சொன்னதாகப் பாடல் பொருள்தரும். அவ்வாறாயின் தலைவனின் வேட்கையை மிகுவிக்கவும் தலைவியின் கூட்டத்திற்கான இசைவை மறைமுகமாகத் தெரிவிக்கவும் பாலுணர்வுப் படிமங்களைத் தோழி பயன்படுத்தி அமைகிறாள் என்று கொள்ளமுடியும்.

தலைவனோடு கூட்டத்தை விரும்பும் தலைவியின் நிலையை விளக்கக் காந்தள் குறியீடு ஆவதை நற்றிணையிலும் அகநானூற்றிலும் உள்ள சில பாடல்களிலும் காணலாம். திப்புத்தோளாரின் பாடலை உளவியல் திறனாய்வுப் பார்வையில் படிக்கும்போது அதில் இடம்பெறும் கருப்பொருள்கள் பால்ஈடுபாட்டுப் படிமங்களாக அமைந்திருப்பது புலனாகும்.

2

சங்க அகப்பாடல்களில் உளவியல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாத்திரங்களில் தோழியைப் போன்றே செவிலியும் பெருஞ்சிறப்புக்குரிய பாத்திரமாகும். தலைவியின் களவொழுக்கம், உடன்போக்கு போன்ற நிகழ்வுகளை அறிந்து அவள் தனது உணர்வுத்துடிப்புகளை வெளியிடுவதாக அமைந்துள்ள குறுந்தொகைப்பாடல்கள் பல.

தலைவனுடன் சென்றுவிட்ட ஒரு தலைவியைத் தேடிச் செல்லும் செவிலியை வெள்ளி வீதியார் ஒரு சிறுபாடலில் காட்சிப்படுத்துகிறார்.

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே (குறுந்தொகை 44)

“என் கால்கள் நடந்து நடந்து நடை ஓய்ந்துபோயின; எதிரில் வருபவர்களையெல்லாம் பார்த்துப்பார்த்து என் கண்கள் ஒளி இழந்தன. இந்த உலகத்தில் என் மகளும் அவள் காதலனும் அல்லாத பிறர் அகன்ற பெரிய வானத்திலுள்ள விண்மீன்களைக் காட்டிலும் பலராவர் என்பது உறுதியாகத் தெரிகிறது” என்று இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்று வருந்திக் கூறுகிறாள்.

பாலைநிலத்தில் நெடுந்தூரம் நடந்தவள் ஆணும் பெண்ணுமாக இணைந்து வருவாரையெல்லாம் பார்த்து ‘இவர்கள் என் மகளும் அவள் தலைவனுமாகத்தான் இருக்க வேண்டும்’ என்று எண்ணி அவரையே கூர்ந்து நோக்கி, அவர்கள் அருகில் வந்தவுடன் அவரல்லர் என்பதை அறிந்து ஏமாந்து மேலும் மேலும் வருவாரையெல்லாம் இப்படியே பார்த்துப் பார்த்து உள்ளம் வெதும்பியவளாய் உலகில் இவ்வளவு ஆண்களும் பெண்களும் உள்ளாரோ என்று மனம் சலித்துச் சொல்வது செவிலியின் வேதனையை உள்ளவாறு எடுத்துக்காட்டும். அவள் ஐந்தாறு காதல் இணையர்களையே பார்த்திருக்கக்கூடும். எனினும் அவளடைந்த

அளவுகடந்த துன்பத்தை வெளிப்படுத்தக் கவிஞர் கையாளும் உத்தி அவரது உளவியல் அறிவைப் புலப்படுத்தும்.

3

தலைவி கூற்றாகவரும் ஔவையார் பாடலொன்று தலைவனும் தலைவியும் விளையாடும் உளவியல் விளையாட்டை நயம்படச் சொல்லும்.

செல்வார் அல்லரென்று யான்இகழ்ந் தனனே
ஒவ்வாள் அல்லளென்று இவர்இகழ்ந் தனரே
ஆயிடை இருபேராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கென்
அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே (குறுந்தொகை 43)

“தலைவன் பிரிந்த காலத்தில் அவர் பிரிந்து செல்லமாட்டார் என்றெண்ணி அவர் செலவை நீக்காமல் சோர்ந்திருந்தேன்; நம் பிரிவை இவளுக்கு முன்னதாக அறிவித்தால் அதற்கு இவள் உடன்படாளென்று எண்ணி என்னிடம் சொல்லாது அவர் சோர்ந்திருந்தார். அப்பொழுது, இருவரிடத்துமுள்ள இரண்டு பெரிய ஆண்மைகள் செய்த போரினால் எனது துன்பமடைந்த நெஞ்சு நல்ல பாம்பு கவ்விக் கடித்ததனால் வருத்தப்படுவதைப்போல இப்பொழுது மிக்க கலக்கத்தை அடைந்துள்ளது” என்பது தலைவி கூற்று.

தன்பால் பேரன்பு கொண்டவராதலால் ‘இவர் பிரிவார்’ என்னும் எண்ணத்திற்கு இடமில்லையாக, ‘செல்லார்’ என்று தலைவி செய்யவேண்டியதைச் செய்யாது சோர்ந்திருந்தாள். தன் பிரிவைக் கூறினால் தலைவி ஏற்றுக்கொள்ளமாட்டாளென்று தலைவன் சொல்லாது பிரிந்தான். தலைவன் சொல்லாது பிரிதலு மரபென்பதைத் ‘துன்புறுபொழுதினும் உணர்த்தாது பிரிந்து தலைவி துன்பம் மிக்க பொழுதினும்’ என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். ‘இவர் நம்மைவிட்டுப் பிரியார்’ என்னும் ஊக்கத்தையும் ‘இவளுக்குச் சொல்லாமலே போவோம்’ என்னும் துணிவையும் முறையே இருவர்பாலும் உண்டான ஆண்மை என்றாள். ஆண்மையென்பது இருபாலார்க்கும் உரியது என்பது தமிழ்மரபாகும். தலைவன் தலைவியரிடையே உள்ள ஒப்பினது வகையைக் கூறும் தொல்காப்பியர் ‘பிறப்பே குடிமை ஆண்மை’ என்பார். அதற்கு உரைதரும் பேராசிரியர் ‘ஆண்மை புருடர்க்காம், அஃது ஆள்வினை எனப்படும். இது

தலைமகளுக்கு ஒப்பதன்றாலெனின் குடிமை ஆண்மை என்புழி ஆண்மையென்பது இருபாற்கும் ஒக்குமாதலின் அமையுமென்பது' என்று அறிவுறுத்துவார்.

பாம்பினால் கடிபட்டவர்க்கு அதன் நஞ்சு உயிர்போகும் வரையிலும் துன்பம் செய்தலைப்போன்று இந்நிகழ்ச்சி என் உயிர்போமளவும் துயர் செய்யும் என்று தலைவி வருந்துவாள்.

4

இன்னொரு ஔவையார் பாடல் **தலைவன் பிரிந்த காலத்தில் தலைவிபடும் வேதனையை** அவள் கூற்றாகவே எடுத்துரைக்கும்.

முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்

ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு

ஆஅ ஒல்லெனக் கூவுவேன் கொல்

அலமரல் அசைவளி அலைப்பஎன்

உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே. (குறுந்தொகை 28)

"அசைந்து வரும் **தென்றல் காற்று என்னைத்துன்புறுத்த, எனது காமநோயை உணர்ந்து கொள்ளாமல் கவலையின்றித்** தூங்கும் ஊரில் உள்ளவர்களை நான் முட்டுவேனோ (சுவரில் முட்டிக்கொள்வேனோ), தாக்குவேனோ (என்னையே தாக்கிக் கொள்வேனோ), **ஆவென்றும் ஒல்லென்றும் ஒலியெழுப்பிக் கூவுவேனோ? இன்னது செய்வது** என்று அறியாதவள் ஆயினேன்" என்று தலைவி வேதனையோடும் சினத்தோடும் பேசுவாள். தன் துயரைத் தன் அன்னை முதலியோர் புரிந்து கொள்ளவில்லையே என்று வருந்தும் தலைவியின் ஆற்றாமையைத் தான் தூங்க இயலாதபோது ஊராரெல்லாம் கவலையற்றுத் தூங்குகிறார்களே என்று அழுது அல்லல் உறுவதாகக் காட்டுவது ஔவையாரின் உளவியல் அறிவைப் புலப்படுத்தும்.

முட்டுதல் என்பது உடலால் தீண்டுதல் என்றும் தாக்குதல் என்பது கோல் முதலிய ஆயுதத்தால் தீண்டுதல் என்றும் பொருள்படும். தலைவி கூவுதலால் ஊரார் தூங்க இயலாது கண்விழித்து அலர் தூற்றுவர். அவ்வலரால் தலைவன் அவளை விரைவில் மணம் செய்துகொள்வான் என்ற எண்ணத்தில் கூவுதலையும் ஒருசெயலாகக் குறிப்பிடுவாள்.

5

கோப்பெருஞ்சோழனின் பாடல் தலைவனது பிரிவு பற்றிக் கூறிய

தோழிக்குத் தலைவி மனம்நொந்து கூறிய விடையை உளவியல் நுட்பத்துடன் முருகியல் இன்பம் தரக்கூறும்.

அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயின் பிரிவோர் உரவோராயின்
உரவோர் உரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே (குறுந்தொகை 20)

"தோழியே, அருளையும் அன்பையும் துறந்து, தம் துணைவியைக் கைவிட்டுப் பொருள்தேடும் முயற்சியை மேற்கொண்டு, பிரிந்து செல்லும் தலைவர் அறிவுடையவரானால், அந்த ஆற்றலை உடையவர் அறிவுடையோராக இருந்துவிட்டுப் போகட்டும். அவரைப்பிரிந்து இருத்தற்குரிய ஆற்றல் இல்லாத நாம் அறிவற்றரானால் நாம் அறிவற்றவராகவே இருந்துவிட்டுப் போவோம்" என்பது தலைவியின் கூற்று.

"நான் பெண்ணென்பது கருதி அருள்காட்டாது, மனைவி என்பது கருதி அன்பு காட்டாது, அருளையும் அன்பையும்விடப் பொருளே பெரிதென்று கருதி அவர் பிரிந்து செல்வாராயின் அவர் கல்மனம் படைத்தவராகவே இருத்தல் வேண்டும். நான் அவரைப் பிரிந்திருக்கும் ஆற்றல் பெறாமை பற்றி வருந்தவில்லை. அது என் அன்பின் மிகுதியையும், அவரது அன்பின்மையையுமே புலப்படுத்தும்" என்று அவள் புலம்புவது எத்தகைய கல்நெஞ்சத்தையும் கரைக்கத்தானே செய்யும்!

6

கயமனார் பாடல்ஒன்று, தலைவனுடன் சென்றுவிட்ட தலைவி வழியில் தாங்கிக்கொள்ள வேண்டிய துன்பத்தை நினைந்து நினைந்து வருந்தும் செவிலி அவளுக்காக வேண்டிக்கொள்வதைச் சொல்கிறது.

ஞாயிறு காயாது மரநிழல் பட்டு
மலைமுதல் சிறுநெறி மணல் மிகத் தாஅய்த்
தண்மழை தலையின் றாக நந்நீத்துச்
சுடர்வாய் நெடுவேல் காளையொடு
மடமா அரிவை போகிய சுரனே. (குறுந்தொகை 378)

"நம்மைவிட்டுப் பிரிந்து ஒளிபொருந்திய நெடிய வேலையுடைய தலைவனோடு மடப்பத்தையும் மாமையையும் உடைய தலைவி சென்ற

பாலைநிலம் கதிரவன் வெயில் வீசாமல், மரத்தின் நிழல்பட்டு, மலையினிடத்தேயுள்ள சிறிய வழியில் மணல் பரவப்பெற்று, குளிர்ந்த மழைபெய்வதாக அமையவேண்டும்'' என்பது செவிலியின் வேண்டுதல்.

தலைவி செல்வதோ கொடிய பாலைநிலம். அதன் தன்மையை நன்கு அறிந்தவள் செவிலி. ஆனால் அவள் பாலைநிலக் கொடுமைக்கு நேர்எதிரான சூழல் அமையவேண்டுமென்று ஆற்றாமை காரணமாக வேண்டிக்கொள்கிறாள். ஞாயிற்றின் வெம்மையைப் போக்க மரத்தின் நிழல்தேவை! தலைவியின் மெல்லடி நோகாமல் இருத்தற்கு மலையிடத்துச் சிறுவழியில் மணல் பரப்பப்பட்டிருத்தல் வேண்டும்! பாலையின் வெம்மை நீங்க மழைவேறு பெய்தல் இன்றியமையாதது!

இவற்றுள் ஒன்றும் நடைபெறாது என்று அறிந்தவளாயினும், செவிலி இவ்வேண்டுகோள்களை வைப்பது தன்மகளின்பால் அவள் கொண்ட அன்பின் மிகுதியைப் புலப்படுத்தும்.

7

பாலைபாடிய பெருங்கடுங்கோவின் பாடல் ஒன்று தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட தோழி அவளுக்கு ஆறுதல் சொல்லக் கையாளும் உத்தியைக் கூறுகிறது.

உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடுஇறந் தோரே (குறுந்தொகை 16)

“தோழி, வழிப்பறி செய்யும் கள்வர்கள் இரும்பினால் செய்யப்பட்ட தம் அம்பை நக நுனியில் புரட்டுதலால் உண்டாகிய ஒலியைப்போன்று செம்மையான காலை உடைய ஆண்பல்லியானது தன் துணையாகிய பெண்பல்லியை அழைத்தற்கு இடமாகிய கள்ளிகளை உடைய பாலையைக் கடந்து பொருளீட்டப்பிரிந்த தலைவர் நம்மை நினையாமல் இருப்பாரோ?'' என்று கூறி அவளது வருத்தத்தைப் போக்கமுயல்வாள்.

ஆண்பல்லி தன் துணையை அழைக்கும் பாலை நிலத்தில் செல்பவர் அதுகேட்டல் இயலுமா, அதனைக் கேட்டாலும் அதனால் தலைவன் அவளை நினைத்தல் நிகழுமா என்பதுபற்றியெல்லாம் தோழியோ, தலைவியோ சிந்திக்கும் நிலையில் இல்லை. ஆனால் தலைவியின் துயரை அவ்வப்போது போக்குதற்கு இத்தகைய

சொல்லாடல்கள் துணைசெய்யும் என்பது உளவியல் அடிப்படையிலான உண்மை. பாலைநிலத்துப் பல்லிக்குத்தன் துணையின்பால் இருக்கும் அன்பு, ஆண் மகனாகிய தலைவனுக்கு இருக்காதா என்ற கேள்வி தலைவியின் உள்ளத்தைத் தைக்கும் என்பது உறுதி.

8

மோசிகீரனார் தமது பாடலொன்றில் செவிலி ஒருத்தி அவளது மகளின் களவொழுக்கம் பற்றி எவ்வாறு அறிந்து கொண்டாள் என்பதை உளவியல் நுட்பத்துடன் காட்சிப்படுத்துவார்.

பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென் என்றனள்
இனிஅறிந் தேனது துனியாகுதலே
கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையும் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினும் தான்தண் ணியளே. (குறுந்தொகை 84)

தலைவி தலைவனோடு சென்றுவிட, அதனையறிந்த செவிலி, "நான் நேற்று வழக்கம்போல் தழுவவும் அதனை என் மகள் வெறுத்தாள். ஏன் அவ்வாறு வெறுத்தாள் என்பதை அப்பொழுது நான் அறியவில்லை; இப்பொழுது உணர்கிறேன். அவள் ஆய் என்னும் வள்ளலது பொதியின் மலையில் உண்டான வேங்கை மலரினது மணத்தையும் ஆம்பல் மலரினது மணத்தையும் வீசும் உடலினைக் கொண்டவள்; ஆம்பல் மலரைக் காட்டிலும் குளிர்ச்சியை உடையவள். ஒருமுறை அவளைத் தழுவியதோடு அமையாமல் மீண்டும் தழுவியபோது 'உடல் வியர்த்தேன்' என்று அவள் வெறுப்புடன் கூறினாள்" என்று உள்ளம் நொந்து கூறுவாள்.

தலைவனோடு இன்பம் துய்த்தபின் அவனது தழுவலையே விரும்பியவள் பிறர் தழுவலை வெறுத்தாள்; நாளும் தன்னைத்தழுவும் செவிலித்தாயாக இருந்தாலும் அவள் தன்வெறுப்பைக் காட்டும் நிலை ஏற்படுதற்கு அவளது களவொழுக்கமே காரணமென்பதை இப்பொழுதே செவிலி புரிந்து கொள்கிறாள்! அப்பொழுதே அறிந்திருந்தால் இவ்வுடன்போக்கு நிகழ்ந்திராமல் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்திருப்பேனே என்று சொல்லாமற்சொல்கிறாள் தன் தவறுணர்ந்த தாய்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

சிலப்பதிகாரப் புதையல்கள்

8 கோவலன் பெற்ற விருதுகள்

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

எந்தக் கோவலன்? சிலப்பதிகாரக் கோவலன் தானா அவன்?
ஆம் அவனே தான்!
அவன் போற்றா ஒழுக்கம் புரிந்தவன் தான்!
கண்ணகியைப் போற்றாமல், தாய் தந்தையைப்
போற்றாமல், மாமன் மாமியரைப் போற்றாமல்,
மாதவியைப் போற்றித் திரிந்து பல்லாண்டுகள்
பிரிந்தவன் தான்!
இடையே வந்தானா? போனானா? எதுவும் நாமறிய
வாய்ப்பு இல்லை!

கண்ணகியாரிடம் அவனே ஒருமுறைக்கு இருமுறை தன் குற்றத்தைத் தானே கூறுகிறான்.

முதல்முறை, மாதவியாரைப் பிரிந்து வந்து கண்ணகியாரைக் கண்டபோது.

இரண்டாம் முறை, மதுரை மாநகரில் சிலம்பு விற்கப் போகும் போது!

முதல்முறையில் வருந்திய அவனைப் புன்முறுவலோடு தான் பார்த்தார்! எழுக என்றதும் எழுந்தார் மதுரைக்கு!

'சிலம்புள கொண்ம்' என்றும் அவரே வழிகாட்டினார்.

இரண்டாம் முறையில் அவன் தன் குறையை விரிய விரியக் கூறியபோதும் தமக்கெனக் கூறாமல் பெற்றோர் "உள்ளகம் வருந்தப் போற்றா ஒழுக்கம்" புரிந்ததைக் கூறினார். நாம் மாற்றா உள்ள வாழ்வு கொண்டமையால் உடனே ஒருப்பட்டு எழுந்ததாகக் கூறினார். போற்றா ஒழுக்கம் என்பது என்ன?

போற்றுதல் என்பது கூடிய நேயத்தரைப் பிரியாது இருத்தல் என்பதே. ஆதலால் போற்றா ஒழுக்கம் உடனிராமல் பிரிந்தது என்பதே! இப்பொருள் எப்படிக் கொள்ளலாம். சிலம்புக்கு முந்திய கலித்தொகை,

"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை" என்று பொருள் பொருந்தக் கூறுவது இவண் கொள்ளலாம்.

குற்றம் செய்தவன் உணர்கிறான்! உரைக்கிறான்!

தன் சிறுமைகளைப் பட்டியல் இடுகிறான் அவனே!

தன்குற்றம் உணர்வான், தன் குற்றம் தானே உரைப்பான், பொறுத்துக்கொள்ள மன்றாடுவான் குற்றத்திற்குக் கழுவாய் தேடியவன் அல்லனோ! தடித்த இயல்பனிடம் தணிவும் பணிவும் வருமா?

'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' என்பது விருதா?

அவன் விருது, அடைக்கலக் காதையிலே மாடலன் வாக்காக அடிகள் வழங்குகிறார்.

கள்வன் அல்லன் கோவலன் என்பதைக் கண்ணகியார் நிறுவு முன்னரே, கோவலன் மாண்பை உரைப்பது **மாடலன் சொல்!** அடிகளாரின் அரிய உத்தி அது! திருடன் அல்லன் கோவலன் என்பதையன்றித் **தீயனும் அல்லன்;** பெருந்தகை வாழ்வன்; வண்மை மிக்கான்; அருளாளன்; எவர்க்கும் முன்னுற ஓடி ஓடி உதவும் உரவோன்! என்பதை நிலைநாட்டக் குறுகுறு நடக்கும் சிறுநடைச் சீரடியால் கூறுகிறார்.

'கருணை மறவன்'

'செல்லாச் செல்வன்'

'இல்லோர் செம்மல்'

என்பவை அவை.

பூம்புகாரில் வாழ்ந்த நாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் மூன்றனைக் கூறி ஒவ்வொன்றன் நிறைவிலும் இவ்விருதுகளை வழங்குகிறார்.

மணிமேகலைக்குப் பெயர் சூட்டுவிழா!

வேண்டுவார் வேண்டுவ பெற உதவுகிறான் கோவலன். முதியன்; வேதியன்; தண்டூன்றித் தளர் நடையிட்டுக் கொடையைப் பெற வருகிறான்!

பாகனுக்கு அடங்காமல் பாய்ந்துவரும் யானை! பற்றுகிறது முதியனை! கோவலன் பற்றுகிறான் யானையின் கையை! முதியனை விடுவித்துத் தான் அக்கையைத் திருகி அடக்கிக் கொம்பைப் பற்றிப் பிடரில் ஏறுகிறான்!

கருணையாம் அருள் இல்லையேல், முதியனைக் காக்க விரைவனா? வாங்கிச் செல்ல வந்த கூட்டத்திடையே எவருக்கும் வாராத இரக்கம் கோவலனுக்கு வந்ததே! அவன் தவிர்த்து எவரும் இலரா? ஆம்!

அவன் தவிர்த்துப் பலர் இருந்தாலும் அருளிரக்கம் இருந்தாலும் துணிந்து செல்லும் வீறு இலர் அவர்! **அருள் மட்டும் போதாது**! வெல்லுதற்கு அரிய **வீரமும் வேண்டும்**! இரண்டும் ஒருங்கே இருந்தமையால் கோவலன் **'கருணை மறவன்'** எனப்பட்டான்.

ஒரு பெண்மணி; குழந்தையைத் தொட்டிலில் இட்டு விட்டுக் குடம் கொண்டு, தண்ணீர் எடுக்கச் சென்றாள்! குழந்தையைக் காக்கக் கீரி ஒன்றும் இருந்தது அவளிடம்! எப்பொழுதும் குழந்தைக்குக் காவலன் போல இருந்தது. பாம்பு ஒன்று தொட்டிலை நோக்கி வந்தது; கீரி, விடுமா? பற்றிப் பிடித்துக் கடித்துக் குதறியது! பகையழித்த மகிழ்வில், நங்கை வருவழி நோக்கி வாயில் பக்கம் வந்தது. அதன் வாயிலும் கழுத்திலும் குருதிக்கறை! பெற்றதாய்க்குக், குழந்தையைத் தான் கீரிகொன்றுவிட்டது என்ற அதிர்ச்சி! இடுப்பில் இருந்த குடத்தைவிட்டாள்! கீரியின் தலையில் பட்டுச் செத்தே போனது!

உள்ளே போனால், தொட்டிலில் குழந்தை அமைந்து உறங்கிக் கொண்டிருக்கக் கண்டாள்; பாம்பு கடியுண்டு கிடப்பதும் கண்டாள்! தன் தலையிலே அடித்துக் கொண்டு செய்யாதது செய்த சிறுமையை எண்ணி நைந்தாள்!

வெளியே இருந்து வீட்டுக்கு வந்த வேதியன் 'கொலைகாரி' தன் மனைவி என எண்ணினான்! இப்பாவம் தொலையாமல் இங்கிரேன் என வெளியேறிவிட்டான். ஓர் ஏட்டை எடுத்துக் "கொலைக்குக் கழுவாய் செய்தலை, யாரைக் கொண்டேனும் செய்" எனப் போய்விட்டான்! அவள் நகரோரிடம் முறையிட்டாள்!

கோவலன் தவிர எவரும் இலரா? கோவலனே முன் வந்தான்! வடமொழி வாசகம் அறிந்தானிடம் காட்டிக் கழுவாய் அனைத்தும் செய்ததொடு, போன வேதியன் வீடு திரும்புமாறும் வேண்டுவ செய்தான்! ஏன் அவளுக்கு அல்லது அவன் கணவனாம் அவனுக்கு உற்றார் உறவே இல்லையா? அள்ளி அள்ளி அறம் செய்து அக்குடும்பத்துயரை அகற்றினான் கோவலன்! அதனால், **"செல்லாச்செல்வன்"** எனப்பட்டான்.

அவன் என்ன செல்லாச் செல்வனா?

"குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும்"

என்று தன் முன்னோர் தந்த பொருளையும் மலைபோல் இருந்ததையும் இழந்தமை நாணமாம் என்றல்லவோ சொல்கிறான்!

ஒருவேளை மணிமேகலை பிறப்புக்கும் பெயர் சூட்டுக்கும் வழங்கியே வறியன் ஆகிவிட்டானா? செல்லாச் செல்வன் என்கிறாரே! தொலையாச் செல்வ என்கிறாரே அரும்சொல் உரையார்; அதை வழிமொழிகிறாரே அடியார்க்கு நல்லார்! அவன் செல்வத்தால் அழியாச் செல்வன் என உயிர்க்கு ஊதியமாம் செல்வத்தைப் பெற்றான் என்பதை,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்பதால் அறியலாமே! அழியும் செல்வம் செல்லாச் செல்வம் அன்று! ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்ச் செல்வம் பெற்றமை, அழிவது கொண்டு அழியாமை பெற்றதால் செல்லாச் செல்வன் எனப்பட்டான்! பொய்யன் ஒருவன்! நல்லவள் ஒருத்தியை அவள் கணவனிடமே பழிகூறினான்! அந்தப் பாவியும் நம்பினான்! பொய்ச்சான்று சொல்வானைப் புடைத்துக் கொல்லும் பூதம் ஒன்று பூம்புகாரில் உண்டாம்! அது அப்பொய்யனைப் பற்றிக் கொல்லப்போக, அப்பொய்யன் தாய் புலம்பி அழுதாள்! ஊரைக் கூட்டிவிட்டாள்! கோவலன் என்ன என்று கேட்டு அறிந்தான்! அப்பொய்யன் தாயின் துயரைத் தாங்க மாட்டானாய்க் கோவலன் பேயினிடம் போய் இவனுக்குத் தரும் தண்டனையை எனக்குத்தா இவனை விடு" என்றான்.

அறங்கூறவல்ல அப்பேய்,

"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்புஈங் கில்லை"

என்று சொல்லிக் கோவலன் முன்னாலேயே பொய்யனைப் புடைத்தது! கோவலன் அவ்வளவில் கையைப் பிசைந்து கொண்டு நின்றானா?

அவன் தாய்க்கும் உற்றார் உறவுக்கும் தானே காவல் கடவுள் போல வேண்டுவவெல்லாம் செய்து **இல்லோர் செம்மல்** எனப்பட்டான்.

"வறியோர் தலைவன்" என்பார் அரும்சொல் உரையார். அவரே "இல்லறத்தார் தலைவ" என்றுமாம் என்கிறாரே!

இல்வாழ்வார் கடன், "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் துணை"

என்றும் இல்லறப் பேணற் குறளை நினைவில் கொண்டு வரவில்லையா? இருந்தும் இல்லாமலும் இருக்கும் நிலையா, **செம்மல்?** செம்மல் செறிந்து இடையீடு இன்றிக் கிடக்கும் இயல்பு அல்லவா!

தூய துறவர் இளங்கோவடிகள் சொல்லால்
இவ்விருது கிடைக்கப் பெற்ற கோவலன் பேறு
ஒரு வகையால் **பெரும்பேறேயாம்!**

சங்க இலக்கியங்களில் இயற்றமிழ்க் கூறுகள்

பேரா.செ.சாரதாம்பாள்,
தகைசால் பேராசிரியர், தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
.கைபேசி: 9488011680.

தொன்மைப் பாரம்பரியமுடைய கன்னித்தமிழாம் செந்தமிழ் வளர்நிலையில் இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாய்த் தோற்றம் பெற்று, அறிவியலும் நுண்கலையும் இணைந்து ஐந்தமிழாய் வளர்த்தெடுக்கப்பட்டது. இன்று கணினியின் அளப்பரிய அறிவுநுட்பம் ஊடுருவக் கணினித்தமிழ் எனத் தமிழ் பல்வகைப் பரிணாம வளர்ச்சிகளைப் பெற்றுள்ளது.

மொழித்தோற்றம்

உலக இயக்கத்தில் மனிதனின் பரிணாம வளர்ச்சியில் முதன்முதலில் தோன்றியது சைகை ஒலியே. பேச்சு மொழிக்கு அடிநாதமாக அமைவது இயற்கை அசைவில் ஏற்பட்ட ஓசைகளும் ஒலிகளின் அதிர்வுகளும் ஆகும்.

"குக்கூ என்றது கோழி யதனெதிர்
துட்கென் றன்றென் றூஉ நெஞ்சம்" *(குறுந்தொகை. 31)*

என்பதில் கோழி கூவிய ஓசையின் அதிர்வு மனத்தைத் தாக்கி, மனம் திக் என்கிறது என்று சுட்டப்பட்டுள்ளது. இங்கு ஒலிக்குறிப்புச் சொற்கள் பேச்சு எழுந்த சிந்தனைச் சூழலைக் குறிக்கிறது.

"ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை யாக" *(அகம்.82: 1,2)*

என்று மூங்கிலின் துவாரத்தில் வேகமாக மோதிய ஓசை புல்லாங்குழல் ஓசை, என்ற இசைத்தோற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. மொழித் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைவது இயற்கை ஒலிகளின் அதிர்வுகள் தரும் உள்ளெழுச்சிகள் ஆகும். இயற்கை அதிர்வுகளை மனிதன் அல்லது கவிஞன் போலச் செய்தல் என்ற படைப்பாற்றல் மூலம் கவிதையாகப் படைத்தான். கவிதை மொழிதான் முதலில் 'எடுத்துரைத்தல்' என்ற பாங்கினை முதன்மைப்படுத்தியது. இங்கிருந்துதான் இயற்றமிழ் என்ற சிந்தனை உருவாகியது.

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது அகத்தியம். இந்நூலை இயற்றியவர் அகத்தியர். இவர் முத்தமிழுக்கும் இலக்கணம் வகுத்துள்ளார் என்று உரைகள்

சுட்டுகின்றன. பனம்பாரனரால் இயற்றப்பட்ட தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் சுட்டும்,

"முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத்தோனே போக்கறு பனுவல்"

என்ற கருத்து இவண் குறிப்பிடத்தக்கது. 'பாயிரம் சுட்டும் பனுவல்' என்பது இயற்றமிழைச் சுட்டும். மக்கள் மனத்தில் தோன்றிப் பல்வேறு எண்ணங்களை இயல்பாக எடுத்துரைக்கும் திறனுடையது இயற்றமிழ். எப்பொருளையும் தெளிவாக எண்ணியறியும் உள்ளத்தின் இயல்பினை, மொழியமைப்பினை இயற்றமிழ் என்பர். 'பாயிரம்' தன்னகத்தே கொண்டுள்ள 'தன்னூல்', 'பனுவல்' என்பவை இயற்றமிழைச் சுட்டும் சொற்களாகும். 'பிறநூல்' என்பது இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய இருவகைத் தமிழையும் குறிக்கும்.

'இயற்றமிழ்' என்பது இலக்கியம் அனைத்தையும் குறிக்கும். இயற்றமிழ் என்பது இயல்பாக முன்மொழிவது, எடுத்துரைக்கப்படுவது. வசன நடையில் அமைந்து உரைக்குறிப்பைத் தன்னுள் அடக்கியது. கவிதை வடிவத்திலும் இருக்கலாம். உரைநடை வடிவிலும் இருக்கலாம். ஒன்றிலிருந்து தான் ஒன்று தோற்றம் பெறுகிறது. இயற்றமிழிலிருந்து தான் இசைத்தமிழும் நாடகத்தமிழும் உருவாயின. இயற்றமிழ் இசைக்கூறுகளின் அமைவுகளுக்கு இடம் கொடுக்கும் பொழுது அது இசைத்தமிழாகிறது. நாடகக் கூறுகள் படிந்த உரையாடல் இலக்கணக் கூறுகளுடன் வடிவெடுக்கும் பொழுது அது நாடகத்தமிழாகிறது.

தொடக்க காலத்தில் பழக்கத்தில் இருந்தது கூத்து. கூத்துக்களிலும் தெருக்கூத்து தான் மக்களின் பொதுவான கூத்துக்கலையாகப் போற்றப்பட்டது. சங்க இலக்கியங்களிலும் துணங்கைக்கூத்து, குரவைக்கூத்து போன்ற பல கூத்துக்கள் பேசப்படுகின்றன. மலையாளத் தொன்மை இலக்கியங்களில் நங்கியார் கூத்து, சாக்கியார் கூத்து போன்ற கூத்துக்கள் மக்களிடைப் பரவலாகப் பேசப்பட்டன.

கிரேக்கத் தொன்மை இலக்கியங்களிலும் டயோனிசியஸ் (Dionysias) தெய்வத்திற்குப் பாடிய இசையுடன் கூடிய வழிபாட்டுப் பாடல் தன்னுணர்ச்சிப் பாடல், நாடகம் போன்ற இலக்கியவகைத் தோற்றத்திற்கு வித்திட்டுள்ளது. உலகெங்கும் இலக்கியத் தோற்றமே நாட்டுப்புற இலக்கியம் அல்லது வாய்மொழி இலக்கியத்திலிருந்து தான் ஆரம்பமாகிறது. நாட்டுப்புற இலக்கியங்களில் கூத்துக்களுக்கு மிகுதியும் இடமுண்டு. கூத்துக்களிலிருந்து தான் நாடகம் தோன்றியது. தொடக்க

காலத்தில் நாடகம் இசையுடன் பாடப்பட்டன. இசைப்பாடலுக்குப் பொருள் கூறும்பொழுது உரை கூறும் முறை இடைஇடையே வருகின்றது.

இறையனார் களவியல் உரை தான் தமிழ்ச்சூழலில் முதலில் கிடைத்த உரை என்று மொழியப்படுகிறது. இந்த உரைத்தோற்றத்தை உறுதிப்படுத்த, தமிழில் முச்சங்கங்கள் இருந்தன, பாண்டிய அரசன் நல்ல உரை வேண்டும் என்று வருந்தி வேண்ட, திறனுடைக் கடவுள் இறையனார் களவியலை எழுதிக்கொடுத்தார் என்று பழங்கதைகள் சொல்லப்படுகின்றன. இக்களவியலுக்கு யார் மொழிந்த உரை சிறந்த உரை என்பதற்கும் கதை எடுத்துரைக்கப்படுகிறது. திரிசடைக் கடவுள் நூல் எழுதிக் கொடுக்க, அதற்கு உரை பலர் சொல்ல முருகப் பெருமான் முன்னிருந்து கேட்டார் என்றும், இறைவனிடம் உரை சொல்ல வல்லார் வேண்டும் என்று கேட்ட பொழுது, மூங்கைப் பிள்ளை, யார் உரையைக் கேட்டு அழுகிறதோ அது நல்ல உரை என இறைவன் எடுத்தது மொழிய, முதலில் மருதனிளநாகனார், உரை சொல்லும் பொழுது, மூங்கைப்பிள்ளை கண்ணிலிருந்து சிறிது கண்ணீர் வந்தது. ஆனால் உருத்திரங்கண்ணனார், பொருளுக்கு உரை சொல்லும் பொழுது, மூங்கைப் பிள்ளையின் கண்களிலிருந்து கண்ணீர் பல்கிப் பெருகியது என்று பல்வேறு கதைகள் பேசப்படுகின்றன.

கதை கூறும் வழக்கம் என்று இதை ஒருபுறம் தள்ளினாலும், இங்கு நூல் அரங்கேற்றம் நிகழ்ந்துள்ளது. அதில் உரையின் வித்து தோற்றமாகிய இருக்கின்ற சூழலும் சிந்திக்கத்தக்கது. இன்னார் மகன் இன்னாருக்கு உரை கூறினார் என்று வழிவழியாகச் சொல்ல 'உரை' என்ற இலக்கியவகைத் தோற்றம் ஆரம்பமாகியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே உரை இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் உரைக்குறிப்புக்கள் பற்றி மூன்று இடங்களில் பேசுகிறார்.

"எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்" *(செய்யுள்:1335)*

என்று யாப்பு, பாட்டு, செய்யுள் எல்லாம் யாப்பியல் மரபுகளுக்குக் கட்டுப்பட்டவை என்கிறார் தொல்காப்பியர்.

"அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே"

என்று பாட்டைப் பற்றிப் பேசும்பொழுது பாட்டில் அடிக்கு முதன்மை கொடுப்பார். யாப்பின் இலக்கணத்தைப் பேசியவுடன்,

"பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியொடு
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்து" (தொல்.செய்.1336)

என்று தொல்காப்பியர் ஏழு இலக்கிய வகைகளும் யாப்பின் வழிப்பட்டது என்று பேசுவார். இறுதியில்,

"பாட்டிடை வைத்த குறிப்பினானும் பாவின்றெழுந்த கிளவியானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்
உரைவகை நடையே நான்கென மொழிப"

என்று தொல்காப்பியர் உரைவகை நடையிலமைந்த இயற்றமிழ்க் கூறுகளை விளக்குவார். மேலும்,

"தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" (தொல்.செய்.538)

என்று உரைதான் மிகவும் தொன்மை உடையது என்கிறார். தொன்மை என்பது உரை (பேச்சு), உரையாடல் விரவி வரும் தன்மையுடையது. "தொன்மை" யென்பது உரைவிராஅய்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது" என்பது பேராசிரியர் உரையாகும். இங்கு எடுத்துக்காட்டப்படும் உரை, மற்றும் உரைவகை என்ற சொற்குறிப்புக்கள் எல்லாம் இயற்றமிழ்க் கூறுகளை உள்ளடக்கிய பகுதிகள் ஆகும். உரைவகை நான்கில் முதலில் 'பாட்டிடை வைத்த குறிப்பைப் பற்றித் தொல்காப்பியர் பேசுகிறார்.

பாட்டிடை வைத்த குறிப்பு:

பாட்டின் அல்லது கவிதையின் இடையிடையே உரைநடைக் கூறுகள் இடைமிடைந்து வரும். கவிதைப் பொருளை விளக்க இடையிடையே ஆசிரியர் உரைநடை உரையாடல் அமைப்பினைப் பயன்படுத்துவார்.

"பாட்டிடை வைத்த குறிப்பினானு மென்பது ஒரு பாட்டு இடையிடை கொண்டு நிற்குங் குறிப்பினான் வருவனவெனப் படும். என்னை? பாட்டுவருவது சிறுபான்மையாகலின், அவை தகடூர் யாத்திரை போல்வன" என்பார் பேராசிரியர்.

பல சொல் தொடர்ந்து பொருள் தரும் பொழுது ஓசை தழுவியது பாட்டு. ஓசையின்றிச் செய்யுள் தன்மையால் வருவது நூல். அவ்வகையுமின்றி உரைத்திறன் ஈங்கு உரை எனப்பட்டது என்று உரையாசிரியர்கள் பாட்டிடை வைத்த குறிப்பை விளக்குவர். மேலும் பாட்டு செய்கிறபொழுது இடையிடையே உரையாடலைப் பயன்படுத்தும்

பொழுது, (நாடகமாக்கும் பண்பிற்கேற்ப) ஆசிரியர் இடையீடு அல்லது பாத்திர இடையீடும் வரும். இப்பாத்திரக் கூற்றின் வழியும் பாட்டிடை வைத்த குறிப்பு வெளிப்படும்.

மேலும் உரை என்பது உரைத்தலொடு பொருந்திய ஓர் இலக்கிய வகைக்கு வழிகாட்டியாக அமைவது என்றும் சொல்லலாம். உரைத்தல் என்பது வாய்மொழியால் சொல்லப்படுவது என்றும் பொருள்படும். 'EPIC' என்ற கிரேக்கச் சொல்லிற்குச் 'சொல்லுதல்' என்பது பொருளாகும். எனவே தான் காப்பியம் என்பது 'எடுத்துரைத்தல்' பாங்கில் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளை இடையிடையே கொண்டு யாக்கப்பட்டுள்ளது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளுக்குச் சிலப்பதிகாரம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

குறிஞ்சிக் கலியில் வரும், "அணிமுகம் மதிஏய்ப்ப" (கலித்.64) என்ற பாடல் இங்குக் குறிப்பிடத்தக்கது. இப்பாடல் தலைவனின் நகைமொழிக்கு, தலைவி உறழ்ந்து கூறும் பாங்கில் அமைந்துள்ளது.

மதியை ஏய்க்கும் முகமதி போன்ற அணிமுகமும் மாமழை போன்ற கண்களும் எனக்குத் துன்பம் செய்கின்றன என்பதற்குத் தலைவி,

> ***"ஏஏ! எல்லா மொழிவது கண்டை, இஃதுஒத்தன் தொய்யில்***
> ***எழுதி இறுத்த பெரும்பொன் படுகம்***
> ***உழுவது உடையமோ யாம்?***
> ***உழுதாய்"*** ***(கலித்.64:8-10)***

என்பதற்குத் தலைவன்,

> ***"குவளையும் நின்னுழ வன்றோ இகலி***
> ***முகைமாறு கொள்ளும் எயிற்றாய் இவைஅல்ல***
> ***என்உழுவாய் நீமற்று இனி"*** ***(கலித்.64:16-18)***

என்று இடையிடையே உரையாடல் பாங்கில் வரும் உரைநடைச் சாயல் அமைந்த குறிப்புக்கள் செய்யுள் பொருளை இன்னும் வலியுறுத்தப் பயன்படுத்தப்படுகின்றன.

பாவின்றெழுந்த கிளவி

'பாவின்றெழுந்த கிளவி' என்பது, "பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருளெழுதுவன போல்வன, சூத்திரம் பாட்டெனப் படாவோவெனின், படா, பாட்டும் உரையும் நூலுமென (Eh.3&1) வேறோதினமையின், அல்லாத சூத்திரத்தின் சொல்லாத பொருளினை உரையாற் சொல்லித் தொடர்புபடுப்பது பாட்டிடை வைத்த குறிப்பாவது" என்பார் பேராசிரியர்.

பாட்டினிடையே புலப்படும் பொருளையும் தொடர்புபடுத்திப் பேசுவதற்குப் பாட்டிடை வைத்த குறிப்பு பயன்படுகிறது. இங்கு கிளவி என்பது சொல், பாவின்றெழுந்த கிளவி என்பது, பாக்களின் இடையே பொருளை விளக்க வரும் சொல், பாக்கள் ஒழியத் தோன்றிய சொல்லாகும். செய்யுளில் பொருள் கூறிக்கொண்டே வரும்பொழுது, சூழல் மாறப்போகிறது என்பதைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அதாவது படைப்பில் எழும் சூழலையும் அகச்சூழலில் மாறும் கதைப்போக்கைக் குறிக்கவும் இது பயன்படும். கவிதைப் பாடுபொருளை இணைக்கும் குறிப்புச் சொல்லாகவும் இது வரும். இது தனிச்சொல்லாகவும் அமையும். கம்பர் இறந்த பொழுது, புகழேந்திப் புலவர்,

"இன்றல்லோ நாமகள் நூல் வாங்கிய நாள்"

என்று வருந்திப்பாடுகிறார். நாமகள் அருள் பொருந்தியவர் கம்பர் என்பது நூல்வாங்கிய நாள் என்ற தொடரின் பொருளாகும்.

பாட்டினிடையே எழும் பொருளின் சூழல் மாற்றத்தைப் புரிந்து கொள்வதற்கும், கவிதைப் பொருளை முன்னும் பின்னும் கொண்டு சென்று பொருளை இணைத்துப் பார்ப்பதற்கும் இச்சொற்கள் பயன்படுகின்றன.

எடுத்துக்காட்டு: 'எனவாங்கு', 'அதாஅன்று', 'இவனுந்தான்', 'இவளுந்தான்' போன்று கலித்தொகையில் இடையிடையே வரும் சொற்களை எடுத்துக்காட்டலாம். இவை பாவின் தொடர்ச்சியைக் குறிக்கவும், பொருண்மைத் தொடர்ச்சியைச் சுட்டவும் வரும் சொற்களாகும். விட்டிசை, தனிச்சொல், இடைநிறுத்தச் சொல் (Caesura) என்றவாறும் இவற்றைக் குறிக்கலாம். 'எனவாங்கு', 'அதாஅன்று' போன்ற தனிச்சொற்கள், பாட்டின் சூழலைக் குறிக்கவும், கவிதைப் பொருளினைத் தொடர்புபடுத்தவும் பயன்படும். மேலும் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், அராகம், அம்போதரங்கம் என்ற கலிப்பா உறுப்புக்கள் இயற்றமிழ்க் கூறுகளையே உள்ளடக்கி நிற்கின்றன. மேலும் ஒரு சொல்லின் வழிப் பொருள் அழுத்தம் கொடுக்கவும் பாவின்றெழுந்த கிளவி பயன்படும்.

"அகவன் மகளே அகவன் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங்கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே!
பாடுக பாட்டே! இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே" (குறுந்தொகை 23)

என்ற பாடலில் 'அவர்' என்ற ஒரு சொல் தான், (பாவின்றெழுந்த கிளவி) தலைவன் தலைவி ஆகிய இருவரின் களவொழுக்க நட்பைக் குறிக்கும் சொல்லாக அமைந்து, இப்பாடலின் அறத்தொடு நிற்றல் என்ற துறையின் பொருண்மை அமைப்பை முழுமைப்படுத்திக் காட்டுகிறது.

தனிப்பாடலில் வரும் முடவர் கூற்றாகவும், குருடர் கூற்றாகவும் வரும் ஒரு பாடலும் இங்குக் குறிப்பிடத்தக்கது. குருடர், முடவர் இருவரும் துணி துவைத்துக் கொண்டிருக்கும் பொழுது, துவைத்த துணி தண்ணீரோடு சென்று விடுகிறது. இதைக் குருடர் பார்க்க முடியாது, உடனே முடவர் கூறுகிறார்.

"அப்பிலே தோய்த்திட்டு அடுத்தடுத்து நாமதைத்
தப்பினால் நம்மை அதுதப்பாதோ"

என்கிறார். அதற்குக் குருடர்,

"இக்கலிங்கம் போனாலென்ன ஏகலிங்க மாமதுரை
சொக்கலிங்க முண்டே துணை"

என்று பதிலளிக்கிறார். இங்கு 'தப்பு' 'கலிங்கம்' என்ற சொற்கள் செய்யுளினிடையே திரும்பத்திரும்ப அமைந்து சொல்வழிப் பொருண்மையை அழுத்தம் பெறக் காட்டத் துணை புரிந்து நிற்கின்றன.

"செல்வார் அல்லர்என்று யான்இகழ்ந் தனனே,
ஒவ்வாள் அல்லள் என்று இவர்இகழ்ந் தனரே,
ஆயிடை இருபேராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்குஎன்
அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே" ***(குறுந்தொகை 43)***

என்ற பாடலில் பயின்றுவரும் பிரிவிடை மெலிந்த தலைவி கூற்றும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இப்பாடலில் வரும் ஆயிடை, என்ற சொல் 'அவர் இகழ்ந்தனரே', 'இருபேராண்மை' ஆகிய இரண்டு சொற்களின் வழிப் பொருண்மைத் தொடர்ச்சியை இணைத்துக் காட்டுகிறது. மேலும் ஆயிடை என்ற சொல் 'இகழ்ந்தனரே', 'இருபேராண்மை என்ற சொற்களின் வழித் தலைவன், தலைவி ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் தம் உணர்வுகளை விட்டுக் கொடுக்கவும் இயலாது, பிரியவும் முடியாது. அதற்கு மேல் பிரியக்கூடாது என்று போராடும் மனநிலைகளைச் சுட்டுகிறது. இச்சொல் இருவர் நெஞ்சிலும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியக்கூடாது என்று ஊடாடி நிற்கும் பிரிவின் அழுத்தத்தைச் சுட்டி நிற்கிறது.

பொருளொடு புணராப் பொய்ம்மொழி

பொருளுணர்த்தும் முறையில் அங்கதத் தன்மை புலப்படும் வண்ணம் சொற்கள் கையாளப்பட்டிருக்கும். பொருளானது கற்பனைத் தன்மை உடையதாக இருக்கும். கட்டுக்கதையாகவும் அமைக்கப்படும். பொருளானது *கற்பனைத் தன்மை நிறைந்த கட்டுக்கதைக்கூறுகள்* பொருந்த அமையும். இந்நிலையில் அப்பொருளை விளக்கும் சொற்களும் அங்கதத்தன்மை நிறைந்து செய்யுளுக்குப் பொருந்தாத பொய்ம்மொழி போலவும் புனையப்படும்.

'பொருளொடு புணராப் பொய்ம்மொழி' என்பது ஒரு பொருளின்றிப் பொய்ப்படத் தொடர்ந்து சொல்வன. அதை ஓர் யானையும் குருவியுந் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக்கியையாப் பொருள்படத் தொடர்நிலையான் ஒருவனுடை ஒருவன் கற்று வரலாற்று முறையின் வருகின்றன என்று *உரையாசிரியர்* விளக்குவர்.

நாட்டுப்புறக்கதைகளிலும் கற்பனைக் கதைகளை இதற்குச் *சான்றாகச் சுட்டலாம்.* நாட்டுப்புறக்கலைஞன் இட்டுக்கட்டி ஒரு பாடலைப்பாடும் பொழுது, நினைவில் நிறுத்த, பொருள் அழுத்தம் கொடுக்க, இன்னொரு கருத்துச் சூழலைப் பிரித்துக் காட்ட கற்பனைத் தன்மை நிறைந்த சொற்களைக் குறிப்பாக வைப்பான். நாட்டுப்புறக்கதைப் பாடலில் கதை கூறும் தன்மை, எடுத்துரைத்தல், கற்பனைத்தன்மை நிறைந்த பொய்ம்மொழிகள், ஓசைச்சொற்கள் சுவைக்கூறுகள் நிறைந்து காணப்படும். நாட்டுப்புறப் பாடலைக் கலைஞன் பாட, கற்பனையாகத் தன்னைத் தயார்ப்படுத்தும் தன்மையும், கதைப்பாடலிலுள்ள கதைக் கூறுகளும் அமைந்த வாய்மொழி இலக்கியம் தான் *வரிவடிவ* இலக்கிய உருவாக்கத்திற்கு வித்திட்டது. வாய்மொழி இலக்கியமும் வரிவடிவச் செம்மையும் இணையும் இடத்தில் தான் செவ்விலக்கியமே (Classical Literature) தோற்றம் பெறுகிறது. இந்நிலையில் தொல்காப்பியர் சுட்டும் உரைக் கூறுகள், இலக்கிய வகைகள், உரை வகைகள் அனைத்திலும் நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கத்தினைக் காணமுடியும். இயற்றமிழ் உருவாக்கத்திற்கு நாட்டுப்புற இலக்கியமே அடிப்படையாக அமைந்துள்ளது.

பொருளொடு புணர்ந்த நகைமொழி

பொருளொடு புணர்ந்த நகைமொழி என்பதற்கு 'நகையினால் பிரிதொரு பொருள் உணரநிற்றல்' என்பார் இளம்பூரணர். நகைக்குறிப்பு

அல்லது நகை மெய்ப்பாட்டின் மூலம் பிறிதொரு பொருள் வாசகர்களுக்கும் புலப்படும்.

'பொருளொடு புணர்ந்த நகைமொழியானுமென்பது பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகுதற் கேதுவாந் தொடர்நிலை. அதுவும் உரையெனப்படும். அசையாவன சிறுகுறுஇடியுரையும், தந்திரவாக்கியமும் போல்வனக் கொள்க. இவற்றுள் 'சொல்லப்படும் பொருள் பொய்யெனப்படாது, உலகியலாகிய நகை தோற்றுமென்பது' என்று பேராசிரியர் விளக்கம் தருகிறார்.

பொருளொடு புணர்ந்த நகைமொழியை இளம்பூரணர் பொருளினால் பொருந்திய நகை, அர்த்தச் செறிவுடைய சிரிப்பு, நகையினால் பிறிதொரு பொருள் உணர நிற்றல் என்று விளக்குகிறார். நகை என்ற மெய்ப்பாட்டின் மூலம் பிறிதொரு பொருள் புலப்படும். பூரணர் பொருளுடன் புணர்ந்த நகைமொழியை ஒப்பிட்டுக் காண்கிறார். உள்ளத்து உவகையால் ஏற்படும் நகைப்பு இல்லாது மனத்துள் ஒரு கருத்தினை வைத்துக்கொண்டு அதனைச் சொற்குறிப்பினால் வெளிப்படுத்தாது சிரிப்பினால் வெளிப்படுத்துவது பொருளொடு புணர்ந்த நகைமொழியாகும்.

பிறிதொரு பொருளை உணர, நகை ஓர் உத்தியாக அமைகிறது. இந்நிலையில் நகையை உள்ளுறை தோன்றும் நிலைக்களன்களுள் ஒன்றாக அடக்குவர். பிறிதொரு நிலையில் நகையை உடல்மொழியாகவும், மெய்ப்பாட்டின் வெளிப்பாடாகவும் கொள்ளலாம்.

பொருளொடு புணராப் பொய்ம்மொழியில் நையாண்டி மட்டும் இருக்கும். பொருளைவிட அதீதக் கற்பனையும் இழைந்தோடும். பொருளொடு புணர்ந்த நகைமொழியில் நையாண்டி வழி ஒரு கருத்து சொல்லப்படும். 'பேரடி' (Parady) என்ற இலக்கிய வகை தோன்றுவதற்குரிய அடிப்படைக் கூறாக இதைக் கொள்ளலாம். கலித்தொகையில் கூனியும் குறளனும் இருவரும் தம் காதல் குறிப்பைப் பேசுகின்ற பொழுது வெளிப்படும் குறிப்பும் உரையாடல் திறனும் நகைச்சுவை உணர்வு மிக்கது.

எ.கா."***நீருள் நிழற்போல் நுடங்கிய மென்சாயல்***

ஈங்குருச் சுருங்கி

இயலுவாய் நின்னோ டுசாவுவேன் நின்றீத்தை" ***(கலித்.94:2-4)***

என, நீரினுள் நிற்கின்ற நிழல்போல, சுருங்கி நிற்கின்ற, மென்சாயல் உடையவளே என விளிக்கிறான்.

குறளனின் அழைப்பிற்குக் கூனி, நீ மட்டும் என்ன!

"யாமை யெடுத்து நிறுத்தற்றால் தோளிரண்டும் வீசி
யாம்வேண்டே மென்று விலக்கவும் எம்வீழும்" (கலித்.94:31-32)

என்று பதில் கூறுகிறாள். ஊருகின்ற ஆமையை நேரே நிறுத்தினால் போன்று உருவம்; அந்த உருவம் இரு கை வீசி நடந்தால் எப்படி இருக்கும் என்று கூனியின் பதில் நகைச்சுவை உணர்வைத் தூண்டி விடுகிறது. இருவரும் ஒருவருக்கொருவர் தம் உருவத்தை இகழ்ந்து கூறி உரையாடினாலும், கூனி அவனை வேண்டாம் என்றாலும் எம் முன் வீழ்ந்து வேண்டுகிறாயே என்பதற்கு, ஒருவரையொருவர் முயங்குதற்குக் காரணமான, 'சாமனின் அண்ணன் காமன் நான்: என் நடையைப் பார்! என்று நடந்து காட்டி என் காதலைக்கூற, இவளோ யான் இனி உன்னை இகழ்ந்து கூறுதலைத் தவிர்த்தேன். இக்கோவிலினுள் பேயும் பேயும் போலத் துள்ளுதலை இக்கூனும், குறளும் உறாநிற்குமென நம்மைப் பார்த்து நகையாடாமல் இருப்பதையே யான் விரும்புகிறேன் என்று சொன்னதோடு அமையாது, ஆமையின் உருவம் என இகழ்ந்த குறளனை, 'தண்டாத் தகடுருவ' என்று காதல் மொழியால் புகழ்ந்து கூறுகிறாள். இப்பாடலின் முதல் பகுதியில் அமைந்த உரையாடல், உருவு கண்டு இகழ்ந்தமையால் தோன்றிய நகையை உணர்த்தியது. இறுதிப்பகுதி உரையாடல், ஒருவருக்கொருவர் முயங்குதலுக்கு உடன்பட்ட தன்மையினால் அவர்களுக்கு இன்பச்சுவை கலந்த நகையுணர்வைத் தோற்றுவித்தது. பிறர் கண்டால் நகையைத் தோற்றுவிக்கும் உருவத்தோற்றமே இருவருக்கும் காமத்தினால் காதல் உணர்வைத் தோற்றுவித்தது என்ற கருத்தைக் குறளன், கூனி ஆகிய இருவரின் நகையுணர்வோடிய உரையாடல் உணர்த்துகிறது.

இசையுடன் பாடிய பாடலுக்கு உரை கூறும் முறை, நூல் அரங்கேற்றம், இன்னார்க்கு இன்னார் என்று வழிவழியாகச் சொன்ன உரைமுறைகள், கதை கூறும் முறை போன்ற நிலைகளெல்லாம் உரைத் தோற்றத்திற்கு அடிப்படைக் களங்கள் எனக் கொள்ளலாம். மேலும் தொல்காப்பியம் சுட்டும் ஏழு இலக்கிய வகைகளில் ஒன்றான, உரையும், பாட்டிடை வைத்த குறிப்பு, பாவின்றெழுந்த கிளவி, பொய்ம்மொழி, நகை மொழி என்ற உரைவகை நடையிலமைந்த உரைக்கூறுகள் எல்லாம் இயற்றமிழ்க் கூறுகளுக்கு வித்திட்டுள்ளன. சங்க இலக்கியத்திலும் இயற்றமிழ்க் கூறுகளின் தடம் விரவிக் கிடக்கின்ற தன்மைகளும் பாடலின் கட்டமைப்பின் வழி உணரமுடிகின்றது.

நீலகேசி

முனைவர் **பெ.சுயம்பு,**
மேனாள் தமிழ்ப் பேராசிரியர், ஆதித்தனார் கல்லூரி,
திருச்செந்தூர்.
கைபேசி: 9486379688

சென்ற இதழின் தொடர்ச்சி

கணவன் இறந்ததும் ஈமப்படுக்கையில் அவனது பிணத்துடன் மனைவியைக் கிடத்தி எரித்திடும் உடன்கட்டை ஏற்றும் வழக்கம் பௌத்தர்களிடம் இருந்ததையும் அதனை நீலகேசி எதிர்த்ததையும் காவிய ஆசிரியர் காட்டுகிறார். பெண் ஒருத்தி மனத்தால் ஒருவனை நினைத்த அளவிலே கற்பினை இழக்கிறாள் என்பதனை மணிமேகலையில் காணலாம்.

ஆவ தின்மை யறிந்தும் அவத்தமே
சாவ தேயுங்கள் சத்துவர் சால்பெனில்
காவல் பூண்ட கணவனோடு ஈமத்தின்
வேம வட்கும் விழுக்குண மாங்கொலோ *(218)*

குண்டலகேசி, அவளது ஆசிரியன் அருக்கச் சந்திரமுனிவன், அவனது ஆசிரியன் மொக்கலன் ஆகியோரை வென்ற பின்னர், மொக்கலனின் ஆசிரியனும் பௌத்த நெறிகளை உலகுக்குத் தோற்றுவித்த புத்ததேவனைத் தேடிச் சென்று அவனையும் நீலகேசி வெல்கிறாள். புத்த தேவனிடம் நீலகேசி வாதிடுங்கால் பௌத்தக் கருத்துக்கள் விரிவாக எடுத்துரைக்கப்பெற்று மறுத்துரைக்கப்படுதலோடு, சமண நெறிகளும் விவரிக்கப்பெறுகின்றன.

நிலம்பொய் நீர்பொய் நெடுநகர் தாமும்பொய்
கலம்பொய் காற்றொடு தீயும்பொய் காடும்பொய்
குணம்பொய் யேயெனக் கூறுஞ் செங்கூறையாய்
சலம்பொய் அன்றிதொன் றேநுங்கள் சத்தையே *(534)*

பௌத்தர்களின் மாயைக் கொள்கை பற்றிய செய்தி இது.

புத்த தேவனின் கொள்கைகள் யாவும் சிறுபிள்ளைத்தனமானவை என்பதனை நீலகேசி ஓர் உவமையின் வழிச் சாடுகிறாள்.

ஓல குளவி குருட்டெண்ணெய் வாணிச்சி
கோலம் சிதையுமென் றெண்ணெயட் டாளென்னும்
பாலகர் பாட்டுரை போன்றது மற்றுநின்
நூலுரை யெல்லாம் நுழைந்துணர் வார்க்கே (635)

நீலகேசியில் காணப்படுகிற பௌத்த சமயக் கொள்கைகளும் வாழ்வியல் முறைகளும் வழிபாட்டு நெறிகளும் புத்த தேவன் உரைத்த பௌத்தத்திற்கு முரணானவை. இந்து சமய வாழ்வியல் நெறிகளை எதிர்த்து நிற்க இயலாது, அதன் நெறிகள் பலவற்றையும் வாழ்வியல் - சமய வழிபாட்டு முறைகளை ஏற்றுச் சீராக்கிக் கொண்ட பிற்கால வழக்கின. எனவே இவற்றுடன் புத்ததேவனை இணைத்து, கபிலபுரம் சென்று அத்தேவனை எதிர்த்து நீலகேசி வாதிட்டு வென்றாள் என்பது காவிய ஆசிரியரின் திறத்திற்கு மாசு சேர்த்துளது.

உருவவழிபாடு முதலியவற்றை எதிர்க்கின்றமையால் நீலகேசியின் ஆசிரியர் காலத்தில் சமணத்தில் இவை இல்லை போலும்! அன்றேல் இவ்வாசிரியர் மகாவீரர் உரைத்த முந்தை உண்மைச் சமணத்தை ஏற்று வாழ்ந்தவர் எனலாம்.

அரிய செய்திகள்

நீலகேசியை எழுதிய ஆசிரியர் குறித்தோ அவரது வாழ்க்கை, காலம் குறித்தோ நூலுள் சான்று காணப்படவில்லை.

நீலகேசி ஒரு தருக்க நூல். இந்நூலுக்கு நீலகேசித்திரட்டு எனும் பெயர் உரையுள் காணப்படுகிறது. ‘நீலகேசித் திரட்டில் நீலகேசி நெறி தலைப்பச் சீலவானது தருமவுரைச் சருக்கம் முற்றும்’, ‘நீலகேசித் திரட்டில் வேதவாதச் சருக்கம் முற்றும்’, ‘ஐவகைப் பூதமுஞ் சேதனை செய்த வெவ்வழற்றாபதன் விசையச் சருக்கம் முற்றும்’ என்பன போன்று சமய திவாகர முனிவர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும், வெவ்வேறு சமய அறிஞர்களுக்குத் தம் சமணக் கருத்துக்களை நீலகேசி தெளிவுறுத்துதலால், இந்நூலை ‘நீலகேசி தெருட்டு’ என்று கூறுதலும் உண்டு.

நீலகேசியில் அரிய செய்திகள் பல இடம்பெற்றுள்ளன. பௌத்தம், ஆஜீவகம், சாங்கியம், வைசேடிகம், வைதிகம், பூதம் எனும் சமயக் கொள்கைகளை இந்நூலில் அறிய முடிகிறது.

புத்தபிரானின் ஜாதகக் கதைக்குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. புத்தர் தம் தாயின் வலப்பக்க விலாவினைக் கிழித்துக் கொண்டு பிறந்தார். அதனால் தாய் ஆறு நாட்கள் குற்றுயிராகக் கிடந்து, ஏழாம் நாளில் இறந்தாள் எனும் செய்தியை நீலகேசி குண்டலகேசியிடம் கூறுகிறாள்.

சமய அறிஞர்களிடையே தத்தம் கொள்கைகளை நிலைநாட்டுதற்காகச் சொற்போர்கள் நிகழ்ந்தன. அப்போர்கள் அறிஞர்கள் நிறைந்த அரசவையில் மன்னர்களின் முன்னிலையில் நிகழ்ந்தன. வென்றோர்க்குச் சிறப்புக்களை மன்னர்கள் செய்தனர். தோற்றோர் எதிர்சமயத்தினைத் தழுவினர். சமய அறிஞர்கள் தம் சமயச் சின்னங்கள் எழுதப்பெற்ற கொடிகளைப் பறக்கவிட்டும் நாவல் மரத்தின் கிளைகளை நிலத்தில் நாட்டியும் சொற்போர்க்கான அறிகுறிகளை அமைத்தனர்.

குண்டலகேசி காம்பிலி நகர அரண்மனை வாயிலில் நாவல் மரத்தின் கிளை ஒன்றை நட்டிருந்தாள். நீலகேசி மன்னனின் இசைவுடன் நாவற்கொம்பினைப் பிடுங்கிக்கொண்டு, அரண்மனைக்குள் நுழைந்தாள். அவளிடம், 'என்னோடு நன்கு உரைப்பார் வேண்டி நாவற்கொம்பு இது நட்டேன்' என்றாள் குண்டலகேசி.

மதனசித்தன் எனும் மன்னனின் அவையில் பிசாசகன் எனும் பூதவாதியை நீலகேசி வென்றாள். அத்தினபுரத்தில் சொற்போரிலும் சமய நெறிகளிலும் வல்லவன் என்பதனை அறிவிக்கும் பொருட்டுக் கொடிச்சீலையைக் கட்டிப் பறக்கவிட்டிருந்த சாங்கியப் புலவரைக் கண்டு நீலகேசி அவரை வென்றாள். அருக்கச்சந்திரன், மொக்கலன் எனும் பௌத்த அறிஞர்களையும் உறையூருக்கு அண்மையிலுள்ள சமதண்டத்தில் ஆஜீவனபூரணன் முதலியோரையும் அவரவர் இருப்பிடங்களில் வென்றாள். அறிஞர்களின் இருப்பிடங்களையும் ஆசிரமங்களையும் நாடிச்சென்று சொற்போரிடும் வழக்கத்தினை இவை காட்டுகிறது.

நீலகேசியில் கவிதைச் சிறப்புக்கூறுகள் சிலவும் காணப்படுகின்றன. கற்பனைகள் தமிழ்க் கவிஞர்களின் மரபினைச் சார்ந்தவை.

மாஞ்சோலை பொங்கி மருதங்கிளிப் பிள்ளைகள்வாய்த்
தீஞ்சா றொழுகும் திணையின் னணிதங்கி ஏங்கும்

தாஞ்சால வாழ்நா டளிரினும் தகைய துண்டு
பாஞ்சால மென்று பலரும் புகழ்பார்த்தி நாடே (10)

வளங்கெழு நெடுமதில் வாயில் யாவையும்
உளம்புக விழுங்கியிட் டுமிழ்வ வொத்துமேல்
விளங்கிவெண் மதிசெலல் விலக்கி நீள்விசும்
பளந்ததன் றுணைமையு மறிவ தொத்தவே (15)

அடிதோறும் ஒத்த ஓசையை உடைய சீர்களை நிறுத்தி நூலாசிரியர் கவிதைக்கு ஓசை நயம் ஊட்டியுள்ளார். விரைவாகப் பாடல்களை யாப்பிலக்கணப்படி அமைத்தற்கும் இவ்வோசை நிரல் அடித்தளமாகிறது. மாஞ்சோலை - தீஞ்சா, தாஞ்சால - பாஞ்சால; இன்ன - மன்ன - சொன்ன - டன்ன என்பன போன்ற சீர்களைக் கொண்ட பாடல்கள் பலவற்றைக் காணலாம்.

அச்சான நூல்களில் பாடலமைப்பில் சீரமைப்பு தளை தட்டிக் காணப்படுதலும் ஆங்காங்கே உளது. ஏடு பெயர்த்து எழுதியோரின் பிழையாகவும் கொள்ளலாம். 'தீஞ்சா றொழுகும் திணையின் னணிதங்கி ஏங்கும்', 'தேவன் னுரைப்பத் தெளிந்தேன்பிற் றெளிந்த தெல்லாம்' (4), 'யான்கண்ட வாறே யுரைப்பன் னவையார்க்கிதனை' (8), 'மன்ன வன்னவன் யாரெனில்' (21) என்பன போன்றவற்றில் விரித்தல் விகாரம் ஆசிரியர் அமைத்ததா? ஏடு பெயர்த்தோரின் தவறா? இத்தகையன பாடல்கள் பலவற்றில் இடம் பெற்றுள்ளன.

வாதி கட்கோர் வயப்புலி யேறனான் (234)

கணவனோடு ஈமத்தின், வேமவட்கும் (218)

கள்விகுதி, வேற்றுமை உருபு போன்ற இடைச்சொற் புணர்ச்சிகளுக்கும் விகாரப் புணர்ச்சி உண்டு எனும் பழங்கொள்கை ஏற்கப்பெற்றுள்ளது.

எண்ணெய் வாணிச்சி, தெய்வதை, படாரி (பிடாரி), பேய்த்தி, குக்குடநகர், அகவை, மாணி, முனைவன், முனைவர், பெருமுத்தப்பெண், முன்னம் (முன்னர்), பிறகள் என்பன போன்ற சொற்கள் பல இக்காவியத்தில் இடம்பெற்றுள்ளன.

'சீவக சிந்தாமணியில் கற்பனை நயமும் வருணனைத் திறனும்'

முனைவர் **உ.கருப்பத்தேவன்**,
உதவிப்பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழயற்புலம்,
மதுரைகாமராசர் பல்கலைக்கழகம்.
கைபேசி: 9443571776.

முன்னுரை

'சீவக சிந்தாமணியில் கற்பனை நயமும் வருணனைத் திறனும்' என்பது இந்த ஆய்வுக் கட்டுரையின் தலைப்பாகும். ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய சீவக சிந்தாமணியில் திருத்தக்கதேவர் நுட்பமாகக் கையாண்டுள்ள கற்பனை நயம், வருணனைத் திறன், அவற்றின் இலக்கியச்சிறப்பு, தனித்தன்மைகள் ஆகியனவற்றைத் திறனாய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

கற்பனை – விளக்கங்கள்

மனிதன் ஒருவனே சிந்திக்கும் ஆற்றல் உடையவன். கற்பனைவளம் படைத்தவன். "கற்பனை இன்றேல் இலக்கியத்திற்கும் வரலாற்றுக்கும் வேறுபாடு இராது. நிழற்படத்திற்கும் சொல்லோவியத்திற்கும் மாறுபாடு இராது" (மது.ச.விமலானந்தம், "கவிதையில் கற்பனை", 'குமரகுருபரன்' - மலர் - 22, இதழ் - 1, 1971, ப.27) என்று கற்பனையின் முக்கியத்துவத்தை மது. ச.விமலானந்தம் சுட்டிக்காட்டியுள்ளார். இயற்கைப் படைப்பில் மனிதனுக்கு மட்டுமே கற்பனை வளம் நிறைந்திருப்பதைக் காணமுடிகின்றது. கற்பனை என்பது மனித மனத்தின் படைப்பாகும். மனிதன் தன் புறக் கண்களால் காணஇயலாத பல காட்சிகளை மனமென்னும் அகக் கண்களால் கண்டு இன்புறுகின்றான். இவ் அகக்காட்சி எண்ணங்களாக வெளிப்பட்டுக் கற்பனையாக உருப்பெறுகின்றது.

"கற்பனை என்பது உலகில் இல்லாத பொருளைப் படைப்பதன்று. உலகில் உள்ள பொருட்களையே புதுமுறையில் இணைப்பதால் பெறும் காட்சியாகும்" (தா.வே.வீராசாமி, தமிழ்க் காப்பியக்கொள்கை, பக்.49-50) இயற்கைப் படைப்பில் மனிதனுக்கு மட்டுமே கற்பனை வளம் நிறைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

"இயற்கை நம் கண்ணெதிரிலேயே உள்ளபோது, அதனை மீண்டும் உள்ளவாறே காட்டுவது நமக்குத் தேவையில்லை. எனவே கற்பனையும் சேர்ந்த படைப்பையே நாம் விரும்புகின்றோம்"

(L.A.Abercrombie, Principles of Literary criticism, p.86) எனக் கற்பனையின் இன்றியமையாமையைத் திறனாய்வாளர் குறிப்பிடுவர்.

"கற்பனை பற்றித் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்கம் கூறுவது கடினமாகும். இதனாலேயே திறனாய்வாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகக் கற்பனைக்கு விளக்கம் "தருவதாகத்" (தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.138) தா.ஏ.ஞானமூர்த்தி கருதுகின்றார். இவரது கருத்தை ஒட்டியே அ.ச.ஞானசம்பந்தன், "கற்பனையைப் பற்றி முடிவான கருத்தாக ஒன்றும் இதுவரை வெளியாகவில்லை. கற்பனை என்பது புலன்கள் நேரடியாக ஒரு பொருளை அனுபவியாத காலத்திலும் அந்தப்பொருளை நினைவிற்குக் கொண்டு வரும் ஒருவகை சக்தி" (அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, ப.158) என்று குறிப்பிடுகின்றார்.

ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் என்னும் திறனாய்வாளர், "கற்பனையைச் சுட்டும் 'Imagination' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு மனக்கண்ணில் பொருட்களைக் காணுதல், உவமை, உருவகங்களால் பொருட்களை உருவாக்கிக் காணுதல், பிறருடைய மனநிலையை, இன்ப துன்பங்களை உணர்தல், வெவ்வேறாக உள்ள பொருட்களை இயைத்துக் காணுதல், வாழ்க்கையின் அனுபவத்தை வெவ்வேறு வகையில் அமைத்துக் காணுதல், பொருட்களை உள்ளவாறே உணரும்போது மாறுபட்ட பொருட்களை நிறுத்திக்கூறுதல்" (I.A.Richards, The Principle of literary criticism, p.186) என்ற பொருள் விளக்கங்களைத் தந்துள்ளார். இலக்கியங்களில் இக்கூறுகள் அனைத்தையும் கொண்டு கற்பனை விளங்குவதைக் காணமுடிகின்றது. கற்பனை இல்லையென்றால் வாழ்க்கை இல்லை; கலையும் இலக்கியமும் இல்லை. இக்கற்பனை வளத்திற்கு மனத்தோடு ஒத்துழைப்பது ஒப்பீட்டு உணர்ச்சியாகும்.

கவிஞனும் கற்பனையும்

"உள்ளது போதும் என்ற மனநிறைவு கவிஞர்களுக்கு ஏற்படுவதில்லை. அதுவே அவர்களின் அகத்தெழுச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது. போதுமென்ற மனநிலை படைப்பாளனுக்கு ஏற்படின் அவனிடம் கலையுணர்ச்சி தீர்ந்தது என்பது பொருளாகும். புதியன படைக்கும் ஆற்றலும் அவனிடம் இருக்காது. ஆகவே உள்ளவாறு அமையும் கற்பனையில் கலைஞர்களுக்கு ஆர்வமில்லை என்றும், உள்ளம் விரும்புமாறு அமையும் கற்பனையிலேயே அவர்களுக்கு ஆர்வம் மிகுதி" (L.A.Abercrombie, op.Cit p.87) என்றும் ஆபர்கிராம்பி வலியுறுத்திக் கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"கவிஞன் பொருளின் அழகில் பெறும் அழகுணர்ச்சி, அவன் கற்பனையில் ஒரு முழு உருவம் பெறுகின்றது. அக்கற்பனையைத் தம் சொல்லாற்றலால் அவன் தன்னுடைய இலக்கியத்தில் வடித்துத் தருகின்றான்" (எம்.நாராயண வேலுப்பிள்ளை, உரைநடைத் தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள், ப.156) தமிழில் பிறவியிலேயே குருடரான அந்தகக்கவி வீரராகவ முதலியார் தம்மைப் பற்றிக் கூறும்போது 'ஏடா யிரங்கோடி எழுதா னன்மனத் தெழுதிப் படித்தவிரகன்' (தனிப்பாடல் திரட்டு, அந்தகக்கவி வீரராகவ முதலியார்) என்று சிறப்பித்துக் கூறுவதைக் காணமுடிகின்றது. அவருடைய கற்பனைக்கு நுகர்வறிவைக் காட்டிலும், அவர் செவிவழியாகப் பெற்ற அறிவே சிறப்பாகப் பயன்படுவதைக் காணலாம். உவமையும் அதன் செறிவான உருவகமும் இல்லையெனில் கற்பனைக்கு இடமேயில்லை எனலாம். கற்பனையின் குறிக்கோள் மனிதன் தன்னையும் தன் சமூகத்தையும் உலகத்தையும் முதலில் உணர்த்திக் கொள்வதேயாகும். இன்பமும் பயனும் அதன் உட்கோளாகும். "கற்பனைப் படைப்புக்கு இன்ப நோக்கு மட்டுமன்று; உலகம் பயனுற வேண்டும் என்பதும் உட்கோளாகும். கற்பனை வெறும் பொழுதுபோக்கிற்காக அமையாது உண்மையை விளக்குவதாகவும் அமையவேண்டும். கவிதை வெறுங்கற்பனையாக அமையாமல் உள்ளதை ஒட்டிக்கூறுவதாகவும் விளக்குவதாகவும் அமைய வேண்டும்" (A.C.Bradley, Oxford lectures on poetry, p.3) என்பர் ஏ.சி.பிராட்லே. இதனை மு.வரதராசன், **"மனிதனின் எண்ணங்கள் (கற்பனைகள்) நுகர்வுகளின் வெளியீட்டுணர்வின் நோக்கமே ஒற்றுமைக்கான வழிகளில் ஒன்றாக விளங்குகின்றது என்பதைப் புலப்படுத்துவதே ஒப்புமையும் உருவகமும் என்று துணியலாம். மனிதனின் உணர்ச்சிகளைப் பெறவும் உணரவும் மனிதனுக்குள்ள ஆற்றல்தான் கற்பனையில் விளைந்த கலைச் செல்வங்களுக்கு எல்லாம் அடிப்படையாகின்றது"** (மு.வரதராசன், இலக்கியத்திறன், ப.123) என்று குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

"காப்பியப் புலவர்கள் பாடப்புகுந்த பொருண்மை, கையாண்ட வடிவம், பயன்கொண்ட வெளியீடு இவற்றுக்கெல்லாம் தங்கள் கற்பனையால் மெருகு கூட்டுகின்றனர்" (ச.வே.சுப்பிரமணியன், மு.நூ., ப.150) "வரையறைகளும், எல்லைகளும் அற்று நினைவினால் அளக்கப்படும் நிலைக்கு அப்பாற்பட்டு, கவிஞனின் சிந்தனை செல்லும்போது கற்பனை உருவாகின்றது" (ச.வே.சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், ப.228) என்கின்றார் ச.வே.சுப்பிரமணியன்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

சங்கச் செய்திகள்

02.12.2017 அன்று முற்பகல் 9.30 மணியளவில் நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனரான வள்ளல் பொன்பாண்டித்துரைத்தேவர் அவர்களின் 106ஆவது நினைவுநாளை முன்னிட்டு தமிழ்ச்சங்கச் சாலையிலுள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி, ராணிஇலக்குமிநாச்சியார், சங்கச்செயலர் ச.மாரியப்பமுரளி, கல்லூரி குழுத்தலைவர் ச.தசரதராமன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் வி.சத்திய நாராயணன் மற்றும் க.சி.அகமுடைநம்பி, செந்தமிழ் இதழ் ஆசிரியர் இரா.சதாசிவம், மணியம்மை மழலையர் பள்ளித் தாளாளர் பி.வரதராஜன், கல்லூரி முதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

06.12.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் க.கைலாசபதி அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவன் ரா.விக்னேஷ் தமது உரையில் “க.கைலாசபதி அவர்கள் சைவ சமய அடியவர்களிடம் அடங்கி இருந்த தமிழ் இலக்கியங்களை மார்க்சிய நோக்கில் ஆராய்ந்து ஒரு புதுப் பாதையைத் தமிழுக்கு வகுத்தவர். இவரது ஆக்கங்கள், தமிழ் இலக்கியத்துறையை மட்டுமின்றி சமயம், பண்பாடு, சமுதாயம், அரசியல் போன்ற பலதுறைகளையும் சார்ந்தவை. இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அமைக்கப்பட்டப் பொழுது அதன் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர். அடியும் முடியும், பண்டைத்தமிழர் வாழ்வும் வளமும், தமிழ் நாவல் இலக்கியம், ஒப்பியல் இலக்கியம் உள்ளிட்ட இவருடைய நூல்கள் இவரது பெருமையை பறைசாற்றுபவை” என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். முன்னதாக க.கைலாசபதி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

11.12.2017 அன்று மகாகவி பாரதியாரின் 136ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சங்க வளாகத்தில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. சங்கச்செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். புலவர் ந.சிவநாதன் ‘ஆழ்கடலுக்குள் என் ஆருயிர்

முன்னோர்' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இவர் தமது உரையில் தமிழுக்கான மதிப்பும், அரவணைப்பும் உயர்ந்து கொண்டுதான் வருகிறது. மூன்று கடல்கோள்களைக் கண்டு இருக்கிறோம். கடல்கோளால் இழந்த தமிழை மீட்டுருவாக்கம் செய்தப் பெருமை நான்காம் தமிழ்ச்சங்கத்தைச் சாரும்" என்று குறிப்பிட்டார். தமிழ்வளர்ச்சித்துறை துணைஇயக்குநர் முனைவர் க.பசும்பொன் அவர்களும், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத்துறைத் தலைவர்(பொறுப்பு) முனைவர் உ.கருப்பத்தேவன் அவர்களும் பாரதியாருக்கும் நான்காம் தமிழ்ச்சங்கத்திற்கும் உள்ள தொடர்பினை நினைவு கூர்ந்தனர். கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் முனைவர் மா.செல்வத்தரசி வரவேற்புரையும், முனைவர் ஜெ.கோகிலா நன்றியுரையும் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், நூலகர், மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

14.12.2017 அன்று முற்பகல் 10 மணியளவில் நாவலர் சோமசுந்தரபாரதியார் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முனைவர் மா.செல்வத்தரசி தமது உரையில் "நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் எட்டையபுரத்தில் பிறந்த மகாகவி பாரதியுடன் இணைந்து பல நூல்களைக் கற்று, பாடல்களையும் இயற்றியவர். திருநெல்வேலிக்கு வந்த ஈழப்புலவர் ஒருவர் இவர்கள் இருவருக்கும் 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கினார். மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராக பதவி வகித்தவர். காந்தியடிகளை முதன்முதலில் தமிழகத்துக்கு வரவழைத்து உரையாற்றச்செய்த பெருமை சோமசுந்தரபாரதியாரையே சாரும். இந்தி எதிர்ப்பு பிரச்சாரத்தில் தீவிரமாக செயல்பட்டவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் முதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக நாவலர் சோமசுந்தர பாரதியாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

14.12.2017 அன்று முற்பகல் 11 மணியளவில் "மொரீசியஸில் தமிழ்" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு சங்க வளாகத்தில் நடைபெற்றது. சங்கச்செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி தலைமை வகித்தார். மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத்

துறைத்தலைவர் (பொறுப்பு) முனைவர் உ.கருப்பத்தேவன் வாழ்த்துரை வழங்கினார். மொரீசியஸ் நாட்டில் செயல்படும் தமிழ் பேசுவோர் ஒன்றியத்தின் தலைவர் ஜீவேந்திரன் சீமான் அவர்கள் தமது சிறப்புரையில் "மொரீசியஸில் கிரியோல் அன்றாட மொழியாகவும், பிரெஞ்சு தொடர்பு மொழியாகவும், ஆங்கிலம் ஆட்சிமொழியாகவும் உள்ளன. தமிழ்மொழியில் பேசவும் தமிழைக் கேட்கவும் வாய்ப்பில்லாத நிலை மொரீசியஸில் ஏற்பட்டது. அடையாளம், எழுத்துத்தமிழ், பண்பாடு, சமயம் ஆகியன இருந்தும் தமிழ்மொழி அங்கு பேசப்படவில்லை. ஒரு மொழி பேசப்படவில்லையெனில் அம்மொழியின் மறைவு தொடங்குகிறது. எனவேதான் இந்நிலையினை மாற்ற ஸ்போக்கன் தமிழ் (பேச்சுத் தமிழ்) பாடங்களை உருவாக்கிப் பயிற்றுவித்ததால் இதுவரை ஆறாயிரம் பேர் பேச்சுத்தமிழைக் கற்றுக்கொண்டு பேசுகின்றனர். தமிழகத்தில் தமிழுக்கான ஒரே கல்லூரியாகத் திகழும் செந்தமிழ் கல்லூரியில் தமிழை நேர்மையுடன் கற்றால் தமிழன்னை நம்மைக் காப்பார்" என்று குறிப்பிட்டார். உதவிப்பேராசிரியர்கள் முனைவர் மா.செல்வத்தரசி வரவேற்புரையும், முனைவர் ஜெ.கோகிலா நன்றியுரையும் வழங்கினர். உதவி பேராசிரியர்கள், நூலகர், மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

18.12.2017 அன்று முற்பகல் 10 மணியளவில் சி.சு.செல்லப்பா அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் தமது உரையில் "சி.சு.செல்லப்பா அவர்கள் ஒரு எழுத்தாளர், கவிஞர் மற்றும் இலக்கிய விமர்சகர். "எழுத்து" என்ற பத்திரிக்கையினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். மணிக்கொடி எழுத்தாளர். வசன கவிதையிலிருந்து புதுக்கவிதையை வேறுபடுத்திக் காட்டிய வித்தகர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக சி.சு.செல்லப்பா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதைச் செலுத்தப்பட்டது. 18.12.2017 அன்று 'அயலகத்தமிழ்' என்ற பொருண்மையில் சங்க வளாகத்தில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. 'மலேசியாவில் தமிழ் இலக்கியம்' என்ற தலைப்பில் மலேசிய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத் தலைவர் திரு.பெ.ராசேந்திரன் அவர்கள் சிறப்புரையும், 'ஆஸ்திரேலியாவில் தமிழ்'

என்ற தலைப்பில் சிட்னி தமிழ் கலை மற்றும் பண்பாட்டுக்கழக செயலாளர் ரா.ஜெ.அனகன்பாபு அவர்கள் சிறப்புரையும் வழங்கினர். உதவி பேராசிரியர்கள் முனைவர் மா.செல்வத்தரசி வரவேற்புரையும், முனைவர் ஜெ.கோகிலா நன்றியுரையும் வழங்கினர். ஆசிரியர்கள், தமிழார்வலர்கள், ஊடகத்தார் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

19.12.2017 அன்று முற்பகல் 11 மணியளவில் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முனைவர் பா.நேருஜி அவர்கள் தமது உரையில் "கி.ஆ.பெ.விசுவநாதம் தமிழர் கழக நிறுவனர்; தமிழர் நாடு இதழாசிரியர், முத்தமிழ் காவலர், தமிழ்த் தேசியப் போராளி, சித்த மருத்துவ சிகாமணி, வள்ளுவ வேல் என பலவாறாக அழைக்கப்படும் பெருமைக்குரியவர். 1938ஆம் ஆண்டு முதல் இந்தி எதிர்ப்பு போரில் தமிழறிஞர்களோடு கைகோர்த்துப் போராடிய முதன்மைப் போராளி" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். முன்னதாக கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

27.12.2017 அன்று முற்பகல் 10 மணியளவில் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களின் நினைவேந்தல் சங்கவளாகத்தில் நடைபெற்றது. முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் தமது உரையில் "தமிழ்ப்பணியே தம் வாழ்வின் உயர்ந்த இலட்சியம் எனக் கருதிய புலவர்களுக்கெல்லாம் புரவலராகத் திகழ்ந்தவர். தான் செல்லவிருந்த சிகாகோ ஆன்மீக மாநாட்டிற்கு விவேகானந்தரை அனுப்பியதன் மூலம் உலக அரங்கில் அவரை கொண்டு நிறுத்திய உத்தமர். தமிழ் இலக்கியங்களிலும், சைவ திருமுறைகளிலும், வைணவப் பிரபந்தங்களிலும் தேர்ச்சிப் பெற்றவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப்பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். முன்னதாக மன்னர் பாஸ்கரசேதுபதி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

28.12.2017 அன்று செந்தமிழ்க் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டமும் ஸ்ரீராமச்சந்திர மிஷனும் இணைந்து நடத்தும் யோகா மற்றும் தியானக்கலை விழிப்புணர்வு கருத்தரங்கம் கல்லூரியில் நடைபெற்றது.

திட்டஅலுவலர் முனைவர் பூ.பூங்கோதை வரவேற்புரையும் முனைவர் மா.செல்வத்தரசி நன்றியுரையும் வழங்கினர்.

29.12.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் தமிழண்ணல் அவர்களின் நினைவேந்தல் சங்கவளாகத்தில் நடைபெற்றது. முனைவர் கி.வேணுகா அவர்கள் தமது உரையில் "தமிழண்ணல் அவர்கள் இளமை முதல் தமிழ்ப் பற்றாளராய், கற்றுத் தெளியும் ஆர்வத்தினராய், அயராது மொழித் தொண்டாற்றும் குறிக்கோள் கொண்டவராய், ஆய்வுப் புலத்தில் அரும்பணி ஆற்றியவர். தமிழ்ச்செம்மல், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை நூற்றாண்டு நினைவுப் பரிசு, சென்னைக் கம்பன் கழக பாராட்டுரை என பல்வேறு பரிசுகளும், பாராட்டுகளும் பெற்றவர். ஒப்பிலக்கியம், சங்க இலக்கியப் பணி, திருக்குறள் பரப்பும் பணி, ஆய்வுப்பணி போன்றவற்றில் இருபதாம் நூற்றாண்டு தமிழறிஞர்களில் தமிழண்ணல் சிறந்து விளங்கியவர். பள்ளித் தமிழாசிரியர், கல்லூரி விரிவுரையாளர், பல்கலைக்கழக துறைத்தலைவர், மொழிப்புல ஒருங்கிணைப்பாளர் எனப் படிப்படியாகத் தனது உழைப்பால் உயர்ந்தவர். அன்னைத் தமிழுக்கு அழகுசெய்யும் நூல்களாக முப்பதுக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்கள் எழுதியவர்'' என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். முன்னதாக தமிழண்ணல் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதைச் செலுத்தப்பட்டது.

29.12.2017 அன்று முற்பகல் 11மணியளவில் தமிழண்ணல் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு சங்கவளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சங்கச்செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி தலைமையில், முனைவர் அருணகிரி அவர்கள் தமிழண்ணல் குறித்த நினைவுரை வழங்கினார். கரூர் தமிழ்ச்சங்க இணைச்செயலாளர் தமிழ் ராஜேந்திரன் மற்றும் பி.வரதராசன் ஆகியோர் நினைவுரை வழங்கினார்.

29.12.2017 பிற்பகல் 2.30 மணியளவில் கல்லூரி நாட்டுநலப்பணி திட்டத்தின் சார்பாக எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் கல்லூரியில் நடைபெற்றது. திரு.பாலு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பிப்ரவரி திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை
(பிப்.1)

நா.வானமாமலை
(பிப்.2)

மு.இராகவையங்கார்
(பிப்.2)

எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளை
(பிப்.3)

வீரமாமுனிவர்
(பிப்.4)

ஜி.யு.போப்
(பிப்.12)

செய்குதம்பிப் பாவலர்
(பிப்.13)

ச.வையாபுரிப்பிள்ளை
(பிப்.17)

ஜி.நாகராஜன்
(பிப்.19)

வை.மு.கோதைநாயகி
அம்மாள்
(பிப்.30)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1